பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 12 புதன்கிழமை 26.04.2023 கதிர் 167

முழு அடைப்புப் போராட்டத்துக்கு

# தீர்வு கிடைக்காவிட்டால் சட்டமறுப்பு போராட்டம்

## நாடாளுமன்றத்தில் சுமந்திரன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 26 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றமுழுஅடைப்புப்போராட்டத்திற்கான காரணங்களுக்கு தீர்வு காணாவிட்டால் சாத்வீகமுறையில்சட்ட மறுப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல்நடவடிக்கை முறைச்சட்டக்கோவை சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞2



## இது ரகசியம் அல்ல!

அரசியல் தலைவர்கள் தங்கள் செல்வாக்கை வளர்க்கவும் அதிகாரம் மற்றும் பதவியைக் கைப்பற்றவும் பல வழிமுறைகளை நாடுவர்.

தமிழ்ப் போராளிகள் குழுக்களின் தலைவர்கள் முன்னர் - ஆரம்பத்தில் - ஆயுதமுனையில்தமது செல்வாக்கைநிலை நாட்டினர். தமிழ் மிதவாதத் தலைவர்களில் பலர் - ஜீ.ஜீ.பொன்னம்பலத்தில் இருந்து இன்றைய சுமந்திரன் வரை - தங்களது சட்டத்துறை மேதா விலாசத்தை அதற்கு நன்கு பயன்படுத்துகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மக்கள் மத்தியில் தமக்கு இருந்த ஜனரஞ்சன ஆளுமையைப் பயன்படுத்தினார். கோட்டாபய ராஜபக்ஷக்ஷ தன்னுடைய இராணுவப் போக்கு மேலாண்மையைப் பயன்படுத்தி செல்வாக்கை ஈட்டினாராயினும், அந்த வழிமுறை அவருக்கு வாய்ப்பானதாக நின்று பிடிக்கவில்லை.

இந்த விதத்தில் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சற்று வித்தியாசமானவர். ஜனரஞ்சனக் ☞2

## மின்னல் தாக்கி பெண் இறப்பு

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கீரிசுட்டான் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் மின்னல் தாக்கி வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மாலை நேரத்தில் நிலவிய சீரற்ற கால நிலையின்போது மின்னல் தாக்கியதில் 62 வயதுடைய பத்மநாதன் தெய்வானை என்ற வயோதிப பெண் உயிரிழந்துள்ளார்

சம்பவ இடத்துக்கு வருகை மேற்கொண்ட மடு பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மே மாதமே கடன் சீரமைப்பு

சர்வதேசநாணய நிதியத்துடனான உடன்பாட்டிற்கமைய கடன் மறுசீரமைப்பிற்கான திட்டமிடல்கள் எதிர்வரும் மே மாதத்தில் உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்ற அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றிருந்தது. அதன்போது உரையாற்றுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போதுள்ள பிரதான பிரச்சினை கடன் மறுசீரமைப்பாகும். இதற்கான பேச்சுக்களில் பிரான்ஸின் லசார்ட் நிறுவனம், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனம் என்பவற்றுடனும் முத்தரப்புபேச்சுக்காக இந்திய, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் நிதி அமைச்சர்களுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றலுடன் மெய்நிகர் ஊடாக பல சுற்று பேச்சு நடத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மத்திய வங்கி, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள்உள்ளிட்ட தரப்பினரால் மே மாதமளவில் கடன் மறுசீரமைப்புதொடர்பில் முறையான திட்டமிடலொன்று உருவாக்கப்படவுள்ளது.

இதேவேளைவரி திருத்தங்கள் அல்லது புதிய ☞2

## இடமாற்றம்

இலங்கையின் பொலிஸ்மாஅதிபர்பதவிக்குப் போட்டியிடும் லலித் பத்திநாயக்க, அஜித் ரோஹன உள்ளிட்ட 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் சேவை தேவைகள் அடிப்படையில் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, லலித் பத்திநாயக்க, பொலிஸ் களப் படைத் தலைமையகத்தில் இருந்து மத்தியப் பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அஜித் ரோஹண தென் மாகாணத்துக்குப் பொறுப்பான பதவியில் இருந்து கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

குற்றங்கள் மற்றும் போக்குவரத்துப் பிரிவு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.கே.டபிள்யூ.கே.சில்வா பொலிஸ் களப் படைத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மத்திய குற்றப் பிரிவு மற்றும் போக்குவரத்து பிரதிப் பொலிஸ்மாஅதிபராகநியமிக்கப்பட்டுள்ளார்.

சஜீவ மெதவத்த சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து தென் மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு ஆகியோரும் இடமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (02)

## மாகாண சபைத் தேர்தலை நடத்த சட்டத் திருத்தம் முன்மொழிவு

பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தக் கூடிய-வாறான தேர்தல் திருத்தச் சட்ட-மூலத்தை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனிநபர் முன்மொழிவாக நாடாளுமன்றத்தில் நேற்று வைத்தார்.

பிரதி சபாநாயகர் தலைமையில் நேற்றுக் கூடிய நாடாளுமன்ற அமர்வின்போது எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தனிநபர் பிரேரணையை முன்வைத்தார்.

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தும் வகையில் இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டது.

இந்த மாகாண சபைதேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக முன்வைக்கப்பட்ட நிலையில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கமைய குறித்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பு இடம்பெற்றது.

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை சுமந்திரன் சமர்ப்பித்தவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் அந்த சட்ட மூல திருத்தத்தை ஆதரித்து வழிமொழிந்தார்.

## எந்தக் கூட்டணியிலும் சு.க. இணையமாட்டாது

### மைத்திரி திட்டவட்டம்

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸதலைமையில்அமைக்கப்படவுள்ள பொதுக்கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பங்கேற்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றமை உண்மைக்குப் புறம்பானது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட



பிரதான எதிர்க்கட்சிகளுக்கிடையில் நடைபெற்ற விசேட சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் ☞2

## நாட்டின் கல்வி முறையை சீர்குலைக்க இடமளியேன்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



* புதிய பாடமாக காலநிலை மாற்றம்
* ஆங்கிலத்தை கட்டாயமாக்கத் திட்டம்

நாட்டின்கல்விமுறையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. தேவைப்பட்டால்அதற்குஎதிராக சட்டங்கள்கொண்டுவருவதற்கு தயாராகவே உள்ளேன் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறை ராகுல கல்லூரியின் நூற்றாண்டு விழா பாடசாலை அதிபர் மேஜர் சுதத் சமரவிக்ரம தலைமையில் நேற்றுநடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலம் கல்வியினால் தீர்மானிக்கப்படுகிறது, 21ஆம் நூற்றாண்டுக்கு உகந்த கல்வியை பிள்ளைகளுக்கு வழங்க அனைவரும் தங்களை அர்ப்பணிக்கவேண்டும். 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த ☞2

## அதிகரித்த எரிபொருள் கோட்டா தொடரும்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அதிகரிக்கப்பட்ட வாராந்த எரிபொருள் கோட்டாவை மறு அறிவித்தல் வரை மாற்றமின்றி பின்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சக்திமற்றும்எரிசக்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்பட்டமையினால் மாதாந்த எரிபொருள் இறக்குமதித் திட்டத்தில் மாற்றம் ஏற்படாது. அத்துடன், எரிபொருள் கோட்டாவை அதிகரிக்கதீர்மானிக்கப்பட்டதன் பின்னர் கியூ.ஆர் குறியீட்டை, முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளது.

எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பதற்கு முன்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ.ஆர் குறியீட்டு பயன்பாட்டிற்கான விதிமுறைகளை மீறி 24 சதவீதமான பெற்றோல் விநியோகிக்கப் ☞2

## தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினை மாற்றப்பட வேண்டும்

### சபையில் சுமந்திரன் எம்.பி. கடும் ஆவேசம்; பிரேரணை கொண்டு வருமாறு அரசு பதில்

இலங்கையில் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரபூர்வஇலட்சினையை மாற்றக் கூறும் விடயத்தில், நாடாளுமன்றில்பிரேரணை ஒன்றைக் கொண்டுவருமாறு, அமைச்சர் மஹிந்த அமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர், எம்.ஏ.சுமந்திரனுக்குஅழைப்புவிடுத்தார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற விவாதத்தில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ இலட்சினையை சபையில், தமது கைபேசித் திரையில் காண்பித்தவாறு கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ இலட்சினை, தர்மசக்கரத்தையும், தூபியையும்கொண்டுள்ளது. இது பார்ப்பதற்கு, பௌத்த மத அலுவல்கள் அமைச்சைப்போன்றுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினை யில், எந்த மதம் வெளிப்படுத்தப்படுகின்றது? ☞4

## கல்வி மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி

அடுத்துவரும் 25 ஆண்டுகளுக்கான தேசியக்கல்விக் கொள்கைச் சட்டகம் மற்றும் ஏற்புடைய அனைத்து மறுசீரமைப்புக்களையும் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ☞4

கப்பல் விபத்தால் ஏற்பட்ட

## கடல் வளப் பாதிப்பு குறித்த அறிக்கையை சமரப்பியுங்கள்

### ஜே.வி.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் விபத்தினால் கடல் வளங்களுக்குஏற்பட்டபாதிப்பு தொடர்பில் 40 துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்த இடைக் கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற ☞4

காலைக்கதிர்
Kalaikkathir

# என்னைக் கொன்று தசைகளையும் எலும்புகளையும் உண்ண முயற்சிக்கிறார்கள் என மைத்திரி புலம்பல்

என்னைக் கொன்று எனது தசைகளையும், எலும்புகளையும் உண்பதற்கு முயற்சிக்கின்றார்கள் என்று புலம்பினார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில்செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தரர். கத்தோலிக்க ஆயர்கள் பேரவையிடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்விஎழுப்பியபோதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் நியமித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் அப்போது ஜனாதிபதியாக இருந்தவரிடத்தில் அறிக்கையை கையளிக்கும்போது, அறிக்கைக்கு மேலதிகமாக கோவையொன்றை வழங்கினார்கள். ஜனாதிபதிமாத்திரமேஅதனை வைத்துக்கொள்ளுமாறும் அவர்கள் கூறியிருந்தனர். வேறு யாருக்கும் அதனை வழங்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டிருந்தனர். அவ்வாறு அந்தக் கோவை வேறுயாருக்காவது வழங்கப்பட்டால் அதில் என்ன உள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

அதேநேரம், குறித்த தாக்குதல் தொடர்பிலான இறுதித் தீர்ப்பு இதுவரையில் எந்தவிசாரணையின்போதும் வழங்கப்படவில்லை. ஆனாலும், விரைவாக விசாரணையை நிறைவு செய்து என்னைச் சிறையில் அடைக்கவேண்டிய தேவை பேராயர் கர்தினாலுக்கு உள்ளது. தீர்ப்புக்கு முன்னதாகவே பாவமான விடயமான என்னைச்சிறையிலடைக்கும் செயற்பாட்டை அவர் செய்ய முயற்சிக்கின்றார். தற்போதும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகின் முன்னணி நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர் எமது நாட்டுக்கு வருகை தந்திருந்தனர். அவர்கள்என்னதகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் விசாரணை அறிக்கையை தேடுவதன் காரணம் என்ன. நாடொன்றின் புலனாய்வுப் பிரிவினர் சஹ்ரானின் தொலைபேசித் தரவுகளை எடுத்துச் செல்வதற்கு யார் இடமளித்தது. இவையெல்லாம் இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது வொரு நூல்பந்துச் சிக்கலடைந்த விடயத்தினைப் போன்றது. கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு சமர்ப்பிப்தற்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் குறித்த அறிக்கையை வெளிப்படுத்த வேண்டும். சபையில் சமர்பிக்க வேண்டும்.

கேள்வி:அப்படியென்றால் உங்களை இலக்குவைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா?

பதில்:- ஆம். என்னைக் கொன்றுஎனதுதசைகளையும், எலும்புகளையும்உண்பதற்கு முயற்சிக்கின்றார்கள்.குண்டுத் தாக்குதல்மேற்கொண்டவர்கள் அங்குள்ளனர். சஹ்ரானின் அடியாட்கள் உள்ளனர். எனது தலைமையிலான ஆட்சியில் கைது செய்யப்பட்ட 160 பேர் வரையில் உள்ளனர். அதில் இருவரை கோட்டாபய விடுத்தலை செய்துள்ளார். அண்மையில் சஹ்ரனின் மனைவி என்று கூறப்பட்டஒருவரைவிடுதலை செய்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று மூன்றுவாரங்கள்சஹ்ரானின் முழுமையானகும்பலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தேன். அழித்தேன். எனினும் பூர்வஜென்ம பாவமொன்று என் பின்னால் சுற்றுகின்றது. குண்டுத்தாக்குதல் செய்தவர்கள் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குநடவடிக்கைகளைமுன்னெடுங்கள்.

அண்மையில் வீதியின் இருமருங்கிலும் நின்று போராட்டம் நடத்தி எத்தனையோ விடயங்களைக் கூறிசத்தமிட்டனர். எனினும் தாக்குதல்களைச்செய்தவர்கள் பற்றி யாரும் எதனையும் கூறவில்லை. பயங்கரவாதிகள் சிறையில் உணவருந்தி, சிகை அலங்கரித்து சிறப்பாக உள்ளனர். எனக்கு எதிராக வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு முயல்கின்றார்கள். இது வேறொரு நிகழ்ச்சியுடனான பணமாகும் - என்றார்.

# ஆயர் பேரவைக்கு மைத்திரியுடன் தனிப்பட்ட கோபங்கள் கிடையாது

## அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவிப்பு

கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எவ்விதமானதனிப்பட்ட கோபங்களும் கிடையானது என்று அதன் வெகுஜன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிாந்த தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொன்று உண்பதற்கான எந்தத் தேவையும் கிடையாது. அவருடன் எமக்கு எவ்விதமான கோபதாபங்களும் இல்லை.

இருப்பினும், அவர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூறுபவர்களில் ஒருவர் என்று கத்தோலிக்க ஆயர்கள் சபை தொடர்ந்து கூறுவதற்கு பலகாரணங்கள் உள்ளன. அவர் அவ்வேளையில்இருந்தஜனாதிபதியாவார்.

அவரே பாதுகாப்பு துறைக்குபொறுப்பானஅமைச்சருமாக இருந்துள்ளார். ஆகவே அவரிடத்தில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நியாயம் கோரது வேறு யாரிடம் நியாயத்தைக் கோருவது என்றார்.

# ஆயர் பேரவை கூடி ஆராயும்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய அறிக்கை குறித்து ஆயர்கள் விரைந்து ஆராயவுள்ளனர் என்று கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் வெகுஜன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் அருந்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார்.

எமது கத்தோலிக்க ஆயர்கள்பேரவையின்தலைவரும் குருணாகல் மறைமாவட்ட ஆயருமான பேரருட்திரு கலாநிதிஹெறால்ட்அந்தோனி பெரேராவிடத்தில் உயிர்த்த ஞாயிறுதாக்குதல்கள் பற்றிய முழுமையான அறிக்கை வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளார்.

ஆயர் பேரவையில் 12 பதவிநிலை கொண்ட 15ஆயர்கள் குறித்த அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து விரைவில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளனர் என்றார்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவர்ச்சி அவரிடம் இல்லை.அரசியல்நரிதந்திரத்துக்கு அப்பால்ஒருதிறமைஅவரிடம் அதிகம் உள்ளது. அதற்கு சமய சந்தர்ப்பம் வாய்க்க, அதுவரையில் அரசியல் குப்பைக்கூடைக்குள் தூக்கிக் கடாசப்பட்டு இருந்த அவர் அதிகார உச்சிக்கு ஏற்றப்பட்டார். பலரும் வெளிப்படையாக அடையாளம் காணாத அந்த திறமைதான் என்ன? அரசு நிர்வாகத்தில் நிதிக் கொள்கைகளை (Fiscal Policies) தந்திரோபாயமாகக் கையாளும் வித்தகம்தான் அது.

பிரதான தேசியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகக் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் - சுமார் மூன்று தசாப்த காலம் - அவர் நீடித்தாலும், இதில் பெரும்பான்மைக்காலம்அவர் எதிரணியில்தான் இருந்தார். தமது அரசியல் வழிகாட்டியான மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ரணிலின் எதிர்த்தரப்பினர் கைகளில் எடுத்துக்கொண்டு, அதிகார அட்டகாசம் புரிந்த சமயங்களில் எல்லாம் அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளை அடக்குவதற்கான வழிமுறை ஒன்று உள்ளது என்று பலரிடமும் ரணில் அடிக்கடி கூறுவது உண்டு. அதை யாரும் அந்தச் சமயங்களில் அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

அது - ஜனாதிபதியினதும் அவரது செயலகத்தினதும் செயற்பாடுகளுக்கு மிக முக்கியமானது நிதி என்ற விடயமாகும். உரிய - போதுமான - நிதி ஒதுக்கீடு இல்லை என்றால் ஜனாதிபதியும் சிவத்தின் நிலைதான். சக்தி இல்லை என்றால் செயலற்றுக் கிடக்கும் சிவனின் கட்டம்தான். ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகளை நாடாளுமன்றம் மூலம் கட்டுப்படுத்தி, அவரை வழிக்குக் கொண்டு வர முடியும் என்பதுதான் ரணில் அவ்வப்போது கூறி வந்த விடயம். நல்லாட்சி அரசில் ஜனாதிபதி மைத்திரி அப்போதைய பிரதமர் ரணிலின் அரசுக்கு எதிராக கிளம்பிய போது, இந்த நாகாஸ்திரத்தைப்பயன்படுத்த ரணில் திட்டமிட்டாராயினும், பின்னர் உயர் நீதிமன்றம் விடயத்தில் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கி விட்டமையால், அத்தகைய பலப்பரீட்சையில் இறங்க வேண்டியதேவைரணிலுக்கு வரவில்லை.

நிதி கொள்கைகளைக் கையாளும் தனது சாதுரியமான - தந்திரோபாயமான - அணுகுமுறை மூலம் சர்வதேசத்தையும் வசப்படுத்தும் - தமக்கு வலுவானதாகதிருப்பும் - ஆளுமைரணிலுக்கு அதிகம் உண்டு என்பதை புலிகள் நன்கு அடையாளம் கண்டமையும் 2005 நவம்பர் ஜனாதிபதிதேர்தலில்ரணிலை தோற்கடித்து மஹிந்தவை கொண்டு வருவதற்கான வியூகத்தை வகுப்பதற்குப் புலிகளைத் தூண்டியது. ரணிலினால்தமக்கு எதிராகப் பின்னப்படக்கூடிய - 'சர்வதேச வலைப்பின்னல்' என்று அப்போதுபுலிகளின்தலைமை அடையாளம் கண்ட - விடயத்தில், பொருளாதார ரீதியில் சர்வதேச ஆதரவைத் தமது சிங்கள அரசுக்கு ஆதரவாகவும், புலிகளுக்கு எதிராகவும் வலிமையாகப் பெருக்கிக்கொள்ளும்ரணிலின் பிரதானதகைமையும்அடங்கி இருந்தது.

இப்போதும்கூட, நாடாளுமன்றத்தில் தமது கட்சியின் சார்பில் ஆக ஒரே ஒரு எம்.பியை மட்டும் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரப்பிரயோகத்தில்இந்தளவு ஆட்டம்போடுகின்றார்என்றால் அதற்குப் பிரதான காரணம் பொருளாதார விடயங்களில் - நிதி நிர்வாக அம்சங்களில் - அவரின் தந்திர அணுகுமுறைதான்.

தேர்தல்களை நடத்தும் சுயாதீன - சுதந்திர - அதிகாரம், அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்குவழங்கப்பட்டிருக்கின்றது. அத்தகைய அரசமைப்புஅதிகாரத்தைக்கூட தேர்தல் ஆணையம் பிரயோகிக்க முடியாதவாறு தமது நிதிக் கையாள்கைச் செல்வாக்கு மூலம் ஒட்டநறுக்கி இருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 113 ஆசனங்களுடன் - அறுதிப் பெரும்பான்மையுடன் - பிரதமரானார் ரணில். அன்றைய சட்ட நிலையில் தேர்தல் முடிந்து இரண்டு வருடங்கள் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. அந்தச்சமயத்தில் பிரதமரான ரணிலை தமது அதிகாரங்கள் மூலம் கட்டுப்படுத்த முடியாது தடுமாறினார் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா.

அன்றையநிலையில்சந்திரிகாதான் நிறைவேற்றதிகார ஜனாதிபதி. முப்படைகளினதும் தலைமைத் தளகர்த்தர். முப்படைகளும் அவற்றின் தளபதிகளுடன் அவரின் முழுக் கட்டுப்பாட்டில்தான் இருந்தன.

ஆனால் அத்தகைய ஜனாதிபதிக்கே காட்டாமல் - தெரியப்படுத்தாமல் - அறிவிக்காமல் - இலங்கை அரசின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் தம்மிஷ்டப்படி யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச்செய்தார் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அது தொடர்பில் ஒன்றும் செய்ய இயலாமல் வாலைச் சுருட்டிக் கொண்டு வாளாவிருந்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. தமக்குக் கீழான படைகள், தமக்குத்தெரியாமல்பிரதமரினால் செய்யப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பதைப் பார்த்திருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

பொதுத்தேர்தல் முடிந்து சுமார்இரண்டரைவருடங்கள் கழித்து - 2004 ஏப்ரலில் - பிரதமர் ரணிலின் அரசை ஜனாதிபதி சந்திரிக்கா கலைத்து, புதிய பொது தேர்தலை நடத்தினாராயினும் - அதில் ரணிலின் அரசு தோற்கடிக்கப்பட்டதாயினும் - தமக்குக் காட்டாமல் பிரதமர் ரணில்தம்பாட்டில்புலிகளுடன் செய்து கொண்ட அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை 2005 நவம்பரில் தமது ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடையும் வரையும் கூட, ஜனாதிபதி சந்திரிகாவால் நிராகரிக்க முடியவில்லை. தனது பதவிக்காலம் முழுவதும் அதைத் தமது படைகள் பின்பற்றுவதைப்பார்த்திருக்க வேண்டியவரானார் சந்திரிகா.

நிதிஅதிகார வலிமையை வைத்துக்கொண்டு அன்று அதிகார கைவரிசையைக் காட்டிய ரணிலிடம் இன்று நிதியமைச்சும், நிறைவேற்று அதிகாரமும் சிக்கிக் கொண்டு விட்டன. அதனால் ஆட்டம் போடுகிறார் அவர். அதற்கு முதல் களப்பலி நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை. ஜனநாயக நாட்டில் மக்கள்தமது இறைமையைப் பிரயோகிக்கும் முறைமையான வாக்களிக்கும் உரித்து, அந்த நரித் தந்திர அரசியல்வாதியினால் சூறையப்பட்டிருப்பதுதான் இதில் பெரும் சோகம்.

**- இடி மின்னல் -**

## தீர்வு கிடைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரதுதனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப் புச் சட்டம் மற்றும் சிங்களக் குடியேற்றம் உள்ளிட்ட காரணிகளைமுன்னிலைப்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மாபெரும் முழுஅடைப்புப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பயங்கரவாத எதிர்புசட்டமூலத்துக்குஎதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புகள் தோற்றம் பெற்றுள்ளதால் நாடாளுமன்றத்தில் சட்ட மூலத்தை சமர்ப்பிப்பது தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்குச்சமர்ப்பிப்பதை தாதமப்படுத்துவதால் எந்தப் பயனும் கிடையாது. சட்டமூலம் முழுமையாகத் திரும்பப் பெறவேண்டும். உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளப்பெற்றால் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக செயற்படுத்தப்படவேண்டும் என நீதி அமைச்சர் குறிப்பிடுவது முறையற்றது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாகநீக்கப்படவேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று 2017ஆம் ஆண்டுதற்போதைய ஜனாதிபதியான அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உறுதியளித்திருந்தார்.

அவ்வாறு நடந்து கொள்ளாவிட்டால் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை இல்லாமல்போகும் நிலை தோற்றம் பெறும். இவ்வாறான நிலைமையிலேயே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இழுபறி நிலையில் உள்ளது. சட்டமூலத்தை முழுமையாகத் திரும்பப்பெறும் வரை எமது போராட்டம் தொடரும்.

இதேவேளை வடக்கு கிழக்கில்இடம்பெறும்பௌத்த சிங்கள மயமாக்கலுக்கு எதிராக அந்த பிரதேச மக்கள் எதிர்ப்பைவெளியிடுகின்றனர். சமய வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டுள்ளதுடன், விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில்பல பிரதேசங்களுக்கு நாங்கள் சென்று பார்வையிட்டோம். அங்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் 3,600 ஏக்கர் நிலம் தொல்லியல் திணைக்களத் திற்குதேவையெனபிரசுரிக்கப் பட்டிருந்த நிலையில் முன்னாள்சபாநாயகர்கருஜயசூரிய புத்தசாசன அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் அது 267 ஏக்கராக குறைக்கப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் 3,600 ஏக்கர் நிலமாக அதனை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அரச இயந்திரம் இனப் பாகுபாட்டை காட்டியவாறு தொடர்ச்சியாக இனவாத நோக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்திலும் அதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பில்ஏதேனும்கேள்வி கேட்டால் முன்வரிசையில் இருக்கும் அமைச்சர் எங்களை பயங்கரவாதி என்று கூறுமளவுக்கு நிலைமை காணப்படுகிறது.

இனவாத முகத்தைக் காட்டும்இந்த ஆட்சியுடன்சில புல்லுருவிகள்ஒட்டிக்கொண்டு இருக்கின்றனர்.எந்தக் காலத்திலும் இவர்கள் போன்றோர் இருக்கின்றனர். ஆனால் நியாயமாக செயற்பட வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு உள்ளது. அவ்வாறு இருக்காவிட்டால் அதனை வெளிப்படுத்தும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது. அதனை வெளிப்படுத்தி அதனை பாராது இருக்கும்போது நாங்கள் இப்போது செய்வதைப்போன்றுஎதிர்ப்புக் காட்டவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஆட்சியாளர்களின் ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பாடுகளுக்குத்தற்போது அடைப்புப்போராட்டம் ஊடாக எதிர்ப்புதெரிவிப்பதைபோன்று வெகுவிரைவில் சாத்வீக முறையில் சட்ட மறுப்பு போராட்டத்தையும் முன்னெடுப்போம்என்பதனையும் ஆட்சியாளர்களிடம் குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின்காணிகள் அபகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதுஎன்பதற்காக போராட்டத்தில் ஈடுபடுகிறோம். எமது எதிர்ப்பைமீறிஆட்சியாளர்கள் செயற்பட்டால் பெரும் சட்ட மறுப்பு போராட்டத்திற்கு முகம் கொடுக்க நேரிடும். பொருளாதார நெருக்கடியில் சிக்க நேரிடலாம். நாங்கள் பொருளாதாரத்திற்கு ஒத்துழைக்க தயாராக இருக்கும் நேரத்தில் இனவாதத்தின் மூலம் இன்னும் எங்களை அடக்கி,ஒடுக்க நினைத்தால் நாடுஇன்னும்அதளபாதாளத் திற்குள் செல்லும். இதனை எவராலும் தடுக்க முடியாது - என்றார்.

## எந்தக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ தலைமையில் பொதுக் கூட்டணியை அமைப்பதற்குச் சகலரும் இணக்கம் தெரிவித்தனர் என்று லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றுக் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சி வேறு எந்தக்கட்சியுடனும்கூட்டணி அமைக்கவில்லை. இனி வரும் காலங்களிலேயே தேர்தல்களில்எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

தற்போது ஒவ்வொரு மாவட்டங்களிலும் கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, நாம் கட்சியின் தனித்துவத்தன்மையைப் பாதுகாக்கும் வகையிலேயே தீர்மானங்களை எடுப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் மீதான விவாதத்தின் போது எம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்கள், ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அறிவிப்போம். ஊழல், மோசடி சட்டமூலம் உள்ளிட்ட ஏற்றுக் கொள்ளக் கூடிய மிக முக்கிய தீர்மானங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளக் கூடியவற்றுக்கு வாக்களிக்க முடியும். எனினும், ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பில் திருத்தங்களை முன்வைப்போம்.

இதேபோன்று புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் எமது நிலைப்பாடு மற்றும் திருத்தங்களையும் முன்வைப்போம் - என்றார். (02)

## மே மாதமே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரி அறவீடுகள் தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இதற்கான யோசனைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அவை குறித்து அமைச்சரவையில்கலந்துரையாடப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு அறிவிக்கப்படும் - என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## நாட்டின் கல்வி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைகட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் புதிய கல்வி முறையை உருவாக்குவதே இந்த ஆட்சியின் இலக்காகும்.

எதிர்காலத்தில் கல்வியை நவீனமயப்படுத்துவதற்கு எமது ஆட்சி பெருமளவு பணத்தைச் செலவிடத் தயாராக இருக்கிறது. நாட்டின் மிக முக்கியமான தேசிய வளம் இளைஞர்களாவர். எதிர்கால சந்ததியினருக்கு முறையான கல்வியை வழங்குவதன் மூலம் இலங்கையை இந்து சமுத்திரத்திரத்தில் பிரதான கேந்திர மையமாக மாற்ற முடியும்.

காலநிலை மாற்றத்தை ஒரு பாடமாக மாற்ற வும், புதிய வரலாற்று நிறுவனத்தை நிறுவவும் எமது ஆட்சி திட்டமிட்டுள்ளது. பாடசாலைப் பாடத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக கல்வியில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும். அத்தோடு அனைத்து மாணவர்களும் அறிவியல் மற்றும் கலை பாடங்களை படிக்க வேண்டும்.

மேலும், புவியியல், வரலாறு போன்ற பாடங்களை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் முதலில் உயர்தர வகுப்புகள் உள்ள அனைத்துப்பாடசாலைகளும் இணையத்துடன் இணைக்கப்படும், அதன் பின்னர் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப்பாடசாலைகளுக்கும் இணைய வசதி வழங்கப்படும்.

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்கு வதற்கான ஆசிரியர்களை ஆட்சேர்க்கவும் ஆங்கில பாடத்தை கட்டாயமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி தொடர்பான புதிய அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதில் நானும் கல்வி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரும் உள்ளடங்குகின்றோம். அக்குழு கொள்கை மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளது - என்றார்.

## அதிகரித்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்ததுடன், கோட்டா அதிகரிக்கப்பட்ட பின்னர் அந்த தொகை 14 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

டீசல் விநியோகத்திலும் இதே அளவில் முறையற்ற விதத்திலான எரிபொருள் விநியோகம் குறைவடைந்துள்ளது - என்றுள்ளது.

## கல்வி மறு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைதீர்மானங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ள நிலையில்,அதில்இந்தவிடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டின் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை அடையும் செயன்முறையில் துரிதமாக மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்த வேண்டிய முக்கிய துறையாக கல்வித்துறையை அரசு அடையாளங் கண்டுள்ளது. அதற்கமைய, குறித்த அனைத்துப் பங்கீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் புதிய கல்விக் கொள்கைச் சட்டகத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

அடுத்துவரும் 25 ஆண்டுகளுக்கான தேசியக் கல்விக் கொள்கைச் சட்டகம் மற்றும் ஏற்புடைய அனைத்து மறுசீரமைப்புக்களையும் நாடாளுமன்றத்தில்சமர்ப்பித்து முன்னுரிமை அடிப்படையில் அமுல்படுத்துவதற்குத்தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை

(03ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாவை நீக்கி சபாநாயகர் தலைமையில் ஆட்சியை அமைக்கத் திட்டமிட்டது அமெ.

## தனது நூல் வெளியீட்டு விழாவில் விமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

கோட்டாவை வெளியேற்றி சபாநாயகர் தலைமையில் ஆட்சியை அமைக்க அரிக்கா திட்டமிட்டது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ன.

விமல் வீரவன்ன எழுதிய 'ஒன்பது: மறைந்தகதை' என்ற நூல்வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்த நூலின் முதற்பிரதியை மறைந்த அரசியல்வாதி அமரகீர்த்தி அத்துக்கோரளவிற்கு ஏகாந்த நிலையில் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றியபோதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது, பிரதமர் பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியிலிருந்துநீக்கிவிட்டு செல்லுமாறே இந்தியாவும், அமெரிக்காவும் அறிவுறுத்தியிருந்தன. அதன் பின்னர் ஜனாதிபதியின் செயலாளராக இருந்த காமினி செனரத் இரண்டு கடிதங்களைத் தயாரித்து மாலைதீவுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். இருப்பினும் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு கடிதத்தில்தான் கையொப்பமிட்டுள்ளார். அதாவத அவர் தனது பதவி விலகல் கடிதத்தில் மாத்திரம்தான் கையொப்பமிட்டார்.

இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்கவின்வீட்டுக்குத் தீவைக்கப்பட்டது. இராஜினாமாச் செய்யாதிருப்பவரை உளரீதியாக பலவீனப்படுத்தவதற்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம். ஆனால்ரணில் விக்கிரமசிங்கபதவியிலிருந்து விலக்கப்படவுமில்லை. அவர் இராஜினாமாச் செய்யவும் இல்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகரின் உத்தியோக பூர்வமான இல்லத்திற்கு அமெரிக்கத்தூதுவர் சென்றுள்ளார். நான் இப்போது கூறிய விடயங்களை மறுதலித்து, தனது இல்லத்திற்கு அமெரிக்கத் தூதுவர் வரலில்லை என்று அறிக்யொன்றை சபாநாயகர் வெளியிடவும்கூடும். அது அவர்மீதுஏற்படும்நெருக்கடிகளைத்தவிர்ப்பதற்காகு ஆகும். ஆனால், அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்கு கூறிய விடயத்தினைத்தான் நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

சபாநாயகரின் இல்லத்திற்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர், அவரை ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுமாறு கோரியுள்ளார். ஆனால், அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி இல்லாத நிலையில் பிரதமரே பதில் ஜனாதிபதியாகப் பதவியை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற விடயத்தினை சபாநாயகர் எடுத்துரைத்துள்ளார்.

அப்போது, அமெரிக்கத் தூதுவர் அரசமைப்பினால் பயனில்லை. நாம் அதனைப் பார்த்துக்கொள்கின்றோம். நீங்கள் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளனர். இருப்பினும் அமெரிக்கத் தூதுவரால் ஜனாதிபதி பதவியை சபாநாயகர் பொறுப்பேற்கச் செய்யும் விடயத்திற்கு இணங்கச் செய்ய முடியாதுபோயுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் உக்ரேனில்சபாநாயகரைக்கொண்ட இடைக்கால ஆட்சியை உருவாக்கினார்கள். லிபாயாவிலும் சபாநாய கரைக் கொண்ட இடைக் கால ஆட்சியையே உருவாக்கினார்கள். அந்த வகையில் இங்கும் அவ்விதமான முயற்சியையே கையிலெடுத்திருந்தனர். குறித்த இடைக்கால ஆட்சியில் யார் யார் இருக்கின்றார்கள் என்பதுகூட தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக சரத்பொன்சேகா, சவேந்திர சில்வா (9ஆம் திகதிக்குமுன்னதாகஅவருக்கு இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கும்அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது) உள்ளிட்டவர்கள் இருந்தார்கள். மே 9ஆம் திகதி சம்பவம் நடந்தபோது சவேந்திர இந்தியாவில் இருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை வழிநடத்தியது அமெரிக்க தூதுவர் ஜூலி சங்தான். கோட்டாபய ராஜபக்வைப் பொறுத்தவரையில் பிற்காலத்தில் அமெரிக்காவில் சுகபோகமாகவாழவேண்டும் என்ற எண்ணப்பாட்டில்தான் அவர் இருந்துள்ளார். அதனாலேயே அவர் அமெரிக்கத் தூதுவரால் இலகுவாக நிர்வகிக்கப்பட்டார். அதேநேரம், அரகலய போராட்டத்தினையும் அமெரிக்கத்தூதுவரே நிர்வகித்தார்.

அரகலயவில் முதற் கூடாரத்தினை அமைத்தவர் ரணிலின் நெருங்கியவரான ஆசுமாரசிங்க. ரணில் பிரதமராகியதும், அவர் அரகலய போராட்டத்தினை தொடர்வதற்கு இடமளிப்பதாக கூறினார். அதற்கு காரணம் அவர் இரண்டாம் இலக்கத்திலிருந்து முதலாம் இலக்கத்திற்குச் செல்வதற்காக ஆகும். அதனை ரணில் நிறைவேற்றினார் - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மறைமுக நோக்கங்கள் இல்லை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தில் எவ்விதமான மறைமுக நோக்கமும் இல்லை. அத்துடன் பொருத்தமான எந்தவொரு திருத்த முன்மொழிவுகளையும் ஏற்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்; தெரிவித்ததாவது:-

மக்களின் உயிரைப் பாதுகாத்து தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அறிமுகப்படுத்துதற்கான நோக்கமாகும்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மகா சங்கத்தினருக்கு விளக்கமளித்துள்ளார்.

அதற்கமைய மகாசங்கத்தினர் உட்பட ஏனைய எந்தவொரு தரப்பினரும் திருத்தங்களை முன்வைத்தால் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாத்து தேசிய பாதுகாப்பினை உறு திப்படுத்தல் மற்றும் பயங்கரவாதமற்ற நாட்டை உருவாக்குவதே இந்த சட்ட மூலத்தின் நோக்கமாகும். எமது இந்த நோக்கத்தில் மாற்றங்கள் இல்லை என்பதால் பொறுத்தமானதிருத்தங்களை ஏற்றுக் கொள்ள தயாராகவே உள்ளோம்.

அதற்கமைய திருத்தங்களுடன் உத்தேச புதியபயங்கரவாத திருத்த சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். இனினும் இது குறித்து அவரால் அமைச்சரவையில் புதிய காரணிகள் எவையும் தெரிவிக்கப்படவில்லை என்றார்.

# நிரந்தர வீதி அனுமதிப் பத்தீரம் எதுவும் விநியோகிக்கவில்லை

## அமைச்சர் பந்துல விளக்கம்

கொழும்பு, ஏப். 26

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிரந்தர வீதிப் போக்குவரத்துக்கான அனுமதி பத்திரம் எதையும் வழங்கவில்லை என்று அதன் தலைவர் தனக்கு தெரிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

தனியார் பஸ்களுக்கு 35 அதிவேக நெடுஞ்சாலை அனுமதிப் பத்திரங்கள் அரசியல் அதிகாரத்தில் வழங்கப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ,

தாம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் முதல், தனக்கோ அல்லது வேறு எந்த அரசியல் அதிகாரத்தினருக்கோ, எக் காரணம் கொண்டும் அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டாம் என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு பணிப்புரை வழங்கியுள்ளேன்.

அனுமதி பத்திரம் வழங்குவது தொடர்பில் இதற்கு முன்னர் பல்வேறு ஊழல், மோசடி, முறைகேடுகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. எனவே இதற்கான முறையான மற்றும் வெளிப்படையான தேசிய வேலைத்திட்டமின்றி எவருக்கும் நிரந்தர வீதி அனுமதி பத்திரம் வழங்க வேண்டாம் என்று தான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த உத்தரவு அவ்வாறு இருக்கையில், அமைச்சரவைக்கும் முன்வைத்து, அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைகள் மற்றும் அனுமதி பத்திரம் வழங்கும் நடவடிக்கை தொடர்பில் 30 நாட்களுக்குள் பொது ஊடகங்களில் விளம்பரம் வெளியிடப்படும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேற்றைய முழு அடைப்புப் போராட்டம் ஆட்சிக்கும் உலகுக்கும் தெளிவான செய்தி

7 தமிழ்க் கட்சிகள் இணைந்து அழைப்பு விடுத்து வடக்குகிழக்கில்நேற்று நடந்த முழு அடைப்புப்போராட்டம் பயங்கரவாதம் குறித்த சட்டங்கள் தொடர்பிலும் வடக்கு கிழக்கில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பேரால் நிகழ்த்தப்படும் அடக்குமுறைகள் தொடர்பிலும் இன்றைய ஆட்சிக்கும் உலகுக்கும் ஒரு தெளிவான செய்தியை வழங்கியுள்ளது.

பயங்கரவாதம் குறித்த சட்டங்களைத் தமிழர்கள் பல தசாப்தங்களாக எதிர்த்து வருகின்றார்கள். அந்தச் சட்டத்தை மட்டுமல்ல அவசரகாலச் சட்டத்தையும்கூட தமிழர்கள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறார்கள்.

பேரிடர் காலங்களில் நிலமையைச் சமாளிப்பதற்காகவே அவசர காலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால்தான் அந்தச் சட்டம் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. அதனை நீடிக்கவேண்டுமானால் ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும். அப்படியிருந்தும் அந்தச் சட்டத்தை தொடர்ச்சியாக 2 தசாப்தங்களுக்கும் மேலாகத் ஓர் அடக்குமறைச் சட்டமாகப் பயன்படுத்தினர் பதவியில் இருந்த ஆட்சியாளர்கள். போரைக் காரணம் காட்டி பயங்கரவாதத் தடைச் சட்டம் நிரந்தரமாகவே தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இன்றும்கூட விடுதலை பெறமுடியாதவர்களாகத் தவிக்கிறார்கள்.

இத்தகைய பின்னணியில்தான், கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தமிழர்கள் முற்றாக நிராகரிக்கிறார்கள். அதனை வேண்டாம் என்று கூறுகின்றார்கள். இந்தச் சட்டத்தின் பாதிப்புக் குறித்து நன்கு அறிந்த, கடந்த காலங்களில் அதன் துன்பங்களைச் சுமந்த வடக்கு கிழக்குத் தமிழ்ப் பெண்கள் அண்மையில் இந்தச் சட்டமே வேண்டாம் என்று பல மாவட்டங்களிலும் போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக புதிதாக ஒரு பயங்கரவாதம்தொடர்பானசட்டம்வேண்டாம்என்றுதமிழ் மக்கள் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் உலகுக்கும் நேற்றைய போராட்டத்தின் மூலம் தெளிவான செய்தியைத் தெரிவித்துள்ளார்கள்.

அம்பாறையைத் தவிர்த்து வடக்கு கிழக்கு வாழ் மக்கள் முழுமையாக ஒத்துழைத்து இந்தப் போராட்டத்தை வெற்றியடையவைத்துள்ளார்கள். அதுவும்பொருளாதார நெருக்கடி மிக்க இந்தக் காலத்தில் இரட்டைச் சுமையைத் தாங்கியவாறு அவர்கள் தமது எண்ணத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்கிற செய்தியும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்தச் செய்திகள் இலங்கை ஆட்சியாளர்களால் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை என்றால், வரலாறு மீண்டும் மீண்டும் நிகழ்வதை யாராலும் தடுக்க முடியாமல் போகும். மாற்றம் வேண்டும், முறைமை மாற்றம் வேண்டும் என்று கூறும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட தலைவர்கள் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனை முறைமை மாற்றம் அவசியம் என்தையும் உணர்ந்துகொள்ளவேண்டும். உண்மையான முறைமை மாற்றம் என்பது அங்கிருந்துதான் தொடங்கவேண்டும். அங்கிருந்து தொடங்கும் முறைமை மாற்றம் மட்டுமே நிலையானதாகவும் இருக்கும்.

# நுவரெலியாவின் அழகை கெடுக்கும் கட்டடம் அமைக்க இனிமேல் தடை

## அமைச்சரவை அனுமதி

நுவரெலியா, ஏப். 26

நுவரெலியா நகரில் அதன் இயற்கை சூழலின் தோற்றம் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக நான்கு தள மாடிகளுக்கு மேற்பட்ட புதிய கட்டிடங்களைநிர்மாணிப்பதை மட்டுப்படுத்தும்தீர்மானத்தை மே முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் முறையற்ற வகையிலான அபிவிருத்திகள் காரணமாக நுவரெலியா நகரத்தின் அழகிய தோற்றம் படிப்படியாகக் குன்றிவருவதுடன், அதன்மூலம் சுற்றுலாத்துறைக்குப் பெரும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

அதனால் குறித்த பிரதேசத்தில் சுற்றுலாத்துறையின் விருத்திக்குத் தேவையான சூழலை உருவாக்கக் கூடியவகையில் விரிவான சுற்றுலா அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தை தயாரிக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது.

அதற்கமைய குறித்த அனைத்து பங்கீட்டாளர்களையும் இணைத்துக் கொண்டுஜனாதிபதிசெயலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் நுவரெலியா சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்கும், புதிய கட்டிட நிர்மாணங்களுக்கான ஒழுங்குபடுத்தல்களுக்காக மத்திய மாகாண ஆளுநர் தலைமையிலான செயலணியொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நுவரெலியா மாவட்டத்தில் நான்கு தள மாடிகளுக்கு மேற்பட்ட புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதை மட்டுப்படுத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவான ஒழுங்கு விதிகளை வெளியிடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஓரினச் சேர்க்கையாளர்களை குற்றவாளிகளாக காணும் சட்டங்களை உடனடியாக நீக்குங்கள்

## ஐ.நா. சிறுவர் உரிமைகள் குழு வலியுறுத்து

ஓரினச்சேர்க்கை ஈர்ப்பாளர்கள் மற்றும் மாற்று பாலினத்தவர்களை குற்றவாளிகளாக கருதும் சட்டங்களை விரைந்து நீக்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு, இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் இலங்கை தனது கடமைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கு பொறுப்பான ஐ.நா சிறுவர் உரிமைகள் குழு, மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது. இது தொடர்பில்அக்குழுவிடுத்துள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாற்றுப்பாலின மக்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்த்துப் போராடவும், அவர்களுக்கு எதிரான துன்புறுத்தலைத் தடுக்கவும், அவர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் தற்போதுள்ள சில ஏற்பாடுகளின் கீழ், சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அத்துடன், முன்மொழியப்பட்ட குற்றவியல் (திருத்தம்) சட்டமூலம்பிரிவு365ஐதிருத்துவது மற்றும்பிரிவு 365A ஐ இரத்து செய்வது, சிறுவர்களுக்கு தீங்கு விளைவிப்பதுடன், சிறுவர்களுக்கான இலங்கையின்ஐ.நாவுக்கானவாக்குறுதிகளை மீறப்படுகிறது என்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் ர்மிளா கோனவல தலைமையிலான நகர்ப்புற குடிமக்கள்போன்றஅமைப்புகளால் பரப்பப்படுகின்ற பொய்யான கதைகள் சாவாலுக்குள்ளானவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கை சார்பில் குறிப்பிட்டுள்ளதாவது. ஐ.நா சிறுவர் உரிமைகள் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதுடன், சர்வதேச மனித உரிமைகள்தரநிலைகளுக்குஇணங்க அவற்றைக் கொண்டு வருவதற்காக தண்டனைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேலும் நாட்டின் சட்டம் காலனித்துவ காலத்திலிருந்து மரபுரிமையாகப் பெறப்பட்டபோதும் தற்போதைய அரசநடைமுறையின் கீழ், சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகவுள்ளது.

100க்கும் மேற்பட்ட சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சிறுவர் பாதுகாப்புப் படை மற்றும் சிறுவர் வன்கொடுமை தடுப்பு அறக்கட்டளை மற்றும் பிற தொழில் வல்லுநர்கள் ஆகியோர் குற்றவியல் (திருத்தம்) சட்டமூலத்துக்கு ஆதரவாக சமீபத்தில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். இந்தச்சட்டத்தை இயற்றினால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும் என்று பரப்பப்படும்பொய்களை நம்ப வேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வி மறு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக ஜனாதிபதி தலைமையில் மற்றும் பிரதமர் மற்றும் கல்வி அமைச்சரின் பங்கேற்புடன் 10 உறுப்பினர்களுடன் கூடிய அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### தொல்பொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திணைக்களம் எதனைப் பாதுகாக்கின்றது என்பதையும், எதனை அழிக்க நினைக்கின்றது என்பதையும் இது காட்டுகின்றது - என்று சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டார்.

அத்துடன், வெடுக்குநாறி மலையில் மத சின்னங்கள் அழிப்பு தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி என்ற வகையில் விடயமொன்றைக்கூறவிரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது அங்குள்ள இந்து மத சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன. முன்னதாக, அங்கு வழிபாடுகளைத் தடுக்கும்முயற்சியில்தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டது.

கடந்தசிலவருடங்களுக்கு முன்னர் அதற்கு எதிராகப் பல வழக்குகளும்தொடரப்பட்டன. எனினும், அவர்களால் அதனைத் தடுக்க முடியவில்லை.

தற்போது, ஜீப்களில், கட்டை காற்சட்டை அணிந்து வந்த இனந்தெரியாதோரால் மதச் சின்னங்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன - என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இதன்போது, குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, அவ்வாறான மதச் சின்னங்களின் அழிப்புக்கு இந்த அரசு இடமளிக்கவில்லை என்றும், இது முற்றிலும் பொய்யான கருத்து என்றும் கூறினார்.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினை, இன்று நேற்றல்ல, பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகும். எனவே, எந்த மதத்துக்கும் நாம் வேறுபாடுகளைக் காட்ட இடமளிப்பதில்லை - என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

அப்படியாயின், நீங்கள் அந்த இலட்சினையை மாற்றுவதாக எமக்கு வாக்குறுதி தருகின்றீர்களா? - என்று சுமந்திரன் எம்.பி. பதில்கேள்வி தொடுத்தார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, நாடாளுமன்றில் இது குறித்து பிரேரணைஒன்றைக்கொண்டு வருமாறும், அது நியாயமான தாயின் கலந்துரையாடலாம் என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் மீண்டும் தமது கருத்தைத்தொடர்ந்தசுமந்திரன் எம்.பி., ஒரு காலத்துக்கு முன்னர் உருவாக்கப்பட்டதால், அது சரியாகாது தானே? என்று வினவினார்.

அத்துடன், இப்போது நான் காண்பித்திருக்கின்றேன். அதனை இப்போது மாற்றுவீர்களா? இது நியாயமானதா? நீங்கள் இதனை நியாயமானது என்றுகூறுகின்றீர்களா? என்று தொடர்ச்சியாக கேள்விகளை எழுப்பினார் சுமந்திரன் எம்.பி.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, நீங்கள்தானே இதனை முன்வைக்கிறீர்கள். இது குறித்து கலந்துரையாடுவோம் - என்று குறிப்பிட்டார். (02)

# புத்தளத்தில் இரு குழுக்களுக்கிடையிலான கைகலப்பால் இடைநிறுத்தப்பட்ட போட்டிகள்

நோன்புப் பெருநாளை முன்னிட்டு புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம்தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகத்துடன் இணைந்து பல்வேறு வகையான போட்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணங்களால் 4 வருடங்களுக்குப் பிறகு குறித்த போட்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த போட்டி நிகழ்வுகள் புத்தளம் இஜித்துமா மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றதுடன் நூற்றுக் கணக்கான பார்வையாளர்கள் போட்டிநிகழ்வைக்கண்டு கழிப்பதற்கு வருகை தந்திருந்தனர்.

மோட்டார் சைக்கிள் போட்டிகள், மாட்டு வண்டி பந்தையப் போட்டிகள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச். எமெஸ்.பி ஹேரத் கலந்து கொண்டதுடன் அதிதிகள் பலரும் கலந்துகொண்டணர்.

இதன்போது பார்வையாளர்கள் மைதானத்துக்கு உள்ளே நுழைந்தமையால் நிர்வாகிகள் பார்வையாளர்களை கட்டுப்படுத்த முற்பட்டபோதே நிர்வாகிகளுக்கும் பார்வையாளர்களுக்கும்இடையில்கைகலப்பு ஏற்பட்டது. இதனால் விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

கைகலப்பு ஏற்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றிப்பெற்றவர்களுக்கு மாத்திரம் அதிதிகளால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

### கடல் வளப் பாதிப்பு குறித்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் விஜித ஹேரத் கோரினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழு கடல் வளத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்திய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு விபத்து இடம் பெற்றபோது ஏற்பட போகும் விளைவுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளும் துறைசார் நிபுணர்களும் அரசிடம் எடுத்துரைத்தபோது உரிய தரப்பினர் ஆலோசனைகளை செவிமெடுக்கவில்லை.

கப்பல் விபத்தினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஆராய கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் குழுவை நியமித்தது.

அந்தக் குழு இடைக்கால ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. கப்பல் விவகாரம் குறித்து அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளுக்கு இடையில் மாறுப்பட்ட கருத்துக்கள் தற்போது காணப்படுகின்றன.

நான் குறிப்பிடவில்லை, எனக்கு தெரியாது, அவர்தான் குறிப்பிட்டார் என்று அதிகாரத்தில் இருந்தவர்கள் தற்போது குறிப்பிட்டு பொறுப்பில் இருந்து விலக முயற்சிக்கிறார்கள்.

அறிக்கையில் உணர்வு பூர்வமான விடயங்கள் காணப்படுவதால் அதனை பகிரங்கப்படுத்த முடியாது என்று நீதியமைச்சர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தேசிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. ஆகவே குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள் - என்றார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேசினால் புலி முத்திரை குத்தினால் எனக்கு பெருமை!

## சாணக்கியன் இறுமாப்பு



தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாகப் பேசும் போது எனக்குப் புலி என்று முத்திரை குத்தினால் அதுவே எனக்கு அது பெருமைஎன நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றஅமர்வில் கலந்து கொண்டு கருத்த தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இன்றைய சபை அமர்வின் ஆரம்பத்தில் எனக்கு உரையாற்றுவதற்கு போதிய நேரம் வழுங்கப்படவில்லை. அதனை நான் மீண்டும் மீண்டும்கேட்டபோதுஅமைச்சர் மனு நாணயக்கார என்னைப் புலி எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த சபையில் அநேகமான உறுப்பினர்களுக்கு அவர்களது கேள்விகளைக் கேட்பதற்குஅனுமதியளிக்கப் பட்டது. எனக்குபோதியநேரம் வழங்கப்படவில்லை.

நான் கிழக்கு மாகாணத்தை பிரதிநித்துவப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் எனது கட்சி சார்பாக அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றவன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு ரீதியான பிரச்சினையொன்று அண்மைக்காலமாக காணப்படுகின்றது.

சுமார்50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போக்குவரத்து பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

மாகாணசபைகள் தற்போது இயங்குவதில்லை. இந்த விடயம் தொடர்பாக மாகாண ஆளுநரும் அது தொடர்பில் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றார். அவர் ஓர் இனவாதியைப் போலவே செயற்பட்டு வருகின்றார்.

சிங்கள மக்களின் காவலர் என்ற இனவாத போக்கிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் செயற்பட்டு வருகின்றார்.

போக்குவரத்து பிரச்சினையை அந்த மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இதற்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நான் இன்று இந்த சபையில் போக்குவரத்து அமைச்சரிடம் அது தொடர்பிலான கேள்வியைமுன்வைத்தேன்.

நான் முன்வைத்த பிரச்சினை என்பது உணர்வு ரீதியான பிரச்சினை இல்லை என்று பிரதிசபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் பிரச்சினை ஒன்று ஏற்பட்டால் அது உணர்வு ரீதியிலான பிரச்சினையாக இருக்கும்.

நான் எனது மக்களின் பிரச்சினையை சபைக்கு எடுத்துக் கூறும் போது எனது ஒலிவாங்கியை நிறுத்துகின்றனர்.

ஓர் அமைச்சரவை அமைச்சர் என்னை புலி என்று அழைக்கின்றார். என்னை இனவாதி என்று அழைக்கின்றார்கள்.

வெளிவிவகார அமைச்சரும் நீதி அமைச்சரும் இந்த சபையில் மறுசீரமைப்பில் சம்பியன் என்று அவர்கள்; தங்களைப் புகழாரம் சூட்டிக் கொள்கின்றார்கள்.

அண்மையில் தென்னாபிரிவுக்குஇன்பச்சுற்றுலாவை மேற்கொண்டுநல்லிணக்கம் தொடர்பிலான கற்றலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

நல்லிணக்கம்தொடர்பில் கற்றுவந்தஅமைச்சர்அலிசப்ரி, நான்எனதுமக்கள்தொடர்பில் கூறும் போது அதனை அலட்சியப்படுத்துகின்றார்.

எனது மக்களின் பிரச்சினையை இந்த நாடாளுமன்றத்தில் கூறுவதால் எனக்கு புலி என்று பெயர் வைப்பார்களேயாயின் அதனைநான்மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

என்னை புலி என்று நீங்கள் கூறுங்கள். ஆட்சேபனை இல்லை.

தமிழ் மக்களது பிரச்சினையை பேசும் போது அதற்குநீங்கள்புலிஎன்றுமுத்திரை குத்துவீர்களேயாயின் அதுவே இந்தநாட்டினுடைய சாபக்கேடு என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார்.

# 316 619 மில்லியன் ரூபா வரி வருமானம் முதற்காலாண்டில் நாட்டுக்கு கிடைத்தது

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஏப்.26

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இவ்வாண்டின்முதற்காலாண்டில் 316 619 மில்லியன் ரூபா வரி வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 216 சதவீத அதிகரிப்பை காண்பிப்பதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு முதற் காலாண்டில் 146 565 மில்லியன் ரூபா வரி வருமானம் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையைப் போன்று நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியமை மற்றும் வரி நிர்வாகத்தின் செயலாற்றுகையை அதிகரித்தமை ஆகியன இவ்வரி வருமான அதிகரிப்பிற்கு காரணியாக அமைந்துள்ளன.

எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து சமூக பாதுகாப்பு உதவிக் தொகை அறவீடு செயற்படுத்தப்படாமையால் 2022 இன் முதற் காலாண்டு தொடர்பாக அது ஏற்புடையதாகாது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலம் தொடர்பில் சாணக்கியன் கனேடிய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைப்பு

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் மிகமோசமான தன்மை தொடர்பாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்துள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், கடையடைப்புப்போராட்டம் உள்ளிட்ட தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் மூலம் அச்சட்டமூலத்தை வாபஸ் பெறச்செய்யமுடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொஷ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலத்தின் மிகமோசமான உள்ளடக்கம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் கனேடிய உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கூறுகள் மற்றும் அச்சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டியதன் அவசியம் என்பன பற்றியும் உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, காணிப்பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல்போனோர் விவகாரம், தற்போது இடம்பெற்றுவரும் அதிகாரத் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொஷுடன்கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மாகாண சபைத்தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

அதேவேளை உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலம் தொடர்பில் கருத்து வெளியிட்டஇரா.சாணக்கியன், கனேடிய உயர்ஸ்தானிகர் உள்ளடங்கலாக தாம் சந்திக்கும் அனைத்து வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் இந்தச் சட்டமூலத்தின் பாதகதன்மை குறித்தும், வடக்கு - கிழக்கில் நிலவும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்துவருவதாகத் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றிநேற்று (செவ்வாய்க்கிழமை) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் முழுமையான கடையடைப்புப்போராட்டம் போன்ற தொடர் எதிர்ப்புக்கள் மூலம் உத்தேசபயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை நீக்கமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.




# யாழ். புத்தூரில் மருத்துவருக்கு அச்சுறுத்தல் மருத்துவ சேவையைப் புறக்கணிக்க முடிவு

## பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையாம்!

வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுத்து , அவரது கடமைக்குஇடையூறுவிளைவித்தவர்களை பொலிஸார் கைது செய்ய தவறியமையைக் கண்டித்து , புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவினர் தமது மருத்துவ சேவைகளை இடைநிறுத்த தீர்மானித்து உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10ஆம் திகதி புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்திற்கு அருகில் நடத்தப்பட்ட தாக சாந்தி நிலையத்தில் சத்தமாக பாடல்கள்ஒலிக்கவிடப்பட்டன.

அதனால் தனது கடமைக்கு இடையூறு ஏற்படுவதாகவும், பாடலின் சத்தத்தை குறைக்குமாறும் தாக சாந்தி நிலையத்தில்நின்றவர்களிடம் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

அதனை அவர்கள் பொருட்படுத்தாது இருந்துள்ளனர். அதன்பின் குழு ஒன்று மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

அதனை அடுத்து மருத்துவர் , தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாடுசெய்யப்பட்டு இரண்டு கிழமைகள் கடந்த நிலையிலும் இதுவரை பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காதமையை கண்டித்தும், மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை கைது செய்யுமாறும் , சுகாதார பராமரிப்பு நிலையத்தில் பணியாற் றும் ஏனைய உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும் கோரி தமது மருத்துவசேவைகளை புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை ஹெர்மட்டால் தாக்கிய பெண் கைது!

வெலிப்பன்ன பொலிஸ் நிலையத்துக்குள் இரு பெண்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை கட்டுப்படுத்தச் சென்ற குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி பாதுகாப்பு தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று வெலிப்பன்ன பொலிஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளது. சம்பந்தப்பட்ட இரண்டு பெண்களும் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர்.

இவர்களது முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு முன்பாகவே இருவரிடையே சண்டை ஏற்பட்டுள்ளது. இதன் போது அவர்களை அடக்க முயன்ற பொலிஸ் பொறுப்பதிகாரி மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் மத்துகம உபில்கம பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# பொருளாதாரம் முன்னேற அரச ஊழியர்கள் துயரங்களை சகித்து ஒத்துழைக்கவேண்டும்

## அமைச்சர் பந்துல கோரிக்கை

அரச உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்திற்கு துயரங்களை சகித்துக் கொண்டேனும்பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனஅமைச்சரவைபேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று(செவ்வாய்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் -

நாணய நிதியத்தின் ஆரம்ப நிபந்தனைகளில் நிறைவேற்றப்படவேண்டிய விடயங்கள் பல உள்ளன. அவற்றில் பிரதானமானது சர்வதேச கடன்களுக்கான வட்டியை செலுத்தக் கூடிய திட்டமிடலை சமர்ப்பிப்பதாகும்.

இதன் மூலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு வரி சலுகை வழங்குவது தொடர்பில்பேச்சுகளை முன்னெடுக்க முடியும்.

எனினும் ஒப்பந்தத்தின் படி செயற்பட்டால் மாத்திரமே பேச்சுகளை முன்னெடுக்க முடியும். இதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் நாம் சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றியுள்ளோம்.

இம்முறை அவ்வாறு ஏமாற்ற முடியாது. சர்வதேசமட்டத்தில்பொருளாதார ரீதியில் நம்பிக்கையை உருவாக்கு-வதற்கு ஒப்பந்தத்துக்கமைய செயற்பட வேண்டும்.

எனவே துன்பங்களை சகித்துக் கொண்டேனும் இவற்றுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகாலையில் நடந்த விபத்தில் பொலிஸ் அலுவலர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அலுவலர் உயிரிழந்தார்.

கோபாலகிருஸ்ணன் கஜீபன் என்னும் 25 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டில் இருந்து அதிகாலையில் கிளிநொச்சி பொலிஸ்நிலையம்நோக்கிப் பயணிக்கும்போதே அவர் விபத்தில் சிக்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேகமாகப் பயணித்த சமயம் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற் பட்டதனாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதோடு இவருடன் கூடப் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார். உயிரிழந்த பொலிஸ்உத்தியோகத்தரின் உடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரின் உதவியை கோரியுள்ளதாம் இந்த ஆட்சி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறிவதற்காக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரின் உதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளதாக அமைச்சர் மனுஷ நாயணக்கார தெரிவித்தார்

திங்கட்கிழமை அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் யார்? அதனை வழிநடத்தியவர்கள் யார்? உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்தி உண்மைகளை அம்பலமாக்க வேண்டியுள்ளது. அதன் மூலமாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி வழங்கப்படும்.



அதனைவிடுத்து தனியொரு நபரை இலக்கு வைத்து விசாரணைகளை முன்னெடுப்பது பொருத்தமற்ற செயற்பாடாகும். ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த சம்பவம் தொடர்பில் உண்மைகளை கண்டறிவதற்காக ஸ்கொட்லண்ட்யார்ட்பொலிஸாரின் உதவியை நாடியுள்ளார் - என்றார்.

# சட்ட ஆலோசனைகளுக்கமைவாகவே பேர்ள் கப்பல் வழக்கு சிங்கப்பூரில்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட சிரேஷ்ட சட்டத்துறை நிபுணர்களின் ஆலோசனைக்கமையவே எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கை சிங்கப்பூரில் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை இடம்பெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இலங்கை கடற்பரப்பிற்குள் தீவிபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சிங்கப்பூரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தினார்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சிரேஷ்ட சட்டத்துறை நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஆலோசனைக்கமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தொழிநுட்ப காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. - என்றார்.

இலங்கைகடற்பரப்பிற்குள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீவிபத்துக்குள்ளானதில் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது.

சிங்கப்பூரில் உள்ள சட்ட நிறுவனமொன்றிடம் இந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும், அமைச்சரவை அனுமதியுடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இழப்பீட்டுதொகை தொடர்பாக எதிர்வரும் நாள்களில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாகவும் இது தொடர்பாகக் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 25 வருடங்களுக்கான புதிய கல்விக் கொள்கை

## ஜனாதிபதி தலைமையில் 10 பேரடங்கிய உபகுழு நியமனம்



எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்காக ஜனாதிபதி தலைமையில், பிரத மர், கல்வி அமைச்சர் உள்ளடங்களாக 10 பேரடங்கிய அமைச்சரவை உப குழுவை நியமிக்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பேசுவதற்கு ஜே.வி.பிக்கு எந்த அருகதையும் இல்லை

## நிமல் லான்சா சாட்டை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கதைப்பதற்கு ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுயாதீன உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. மிகவும் கோரமான குற்றச் செயலே அந்தத் தாக்குதல். அது தொடர்பில் நியாயம் கிடைக்க வேண்டும்.

ஏப்ரல் 21 ஆம் திகதி நீர்கொழும்பை சுற்றி வளைக்கவும் ஜே.வி.பி.யினர் திட்டமிட்டனர். இவர்கள் இப்ராஹிமின் வீட்டுக்கு முன்னால் சென்றே போராட்டம் நடத்தியிருக்க வேண்டும். அவரே அவர்களின் தேசியப் பட்டியலில் இருந்தார். அவரின் மகன்களே தாக்குதலில் தொடர்பு பட்டிருந்தனர்.

ஜே,வி,பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அன்று தாக்குதலின் போது கனடாவில் இருந்தார். நான் அமெரிக்காவில் இருந்தேன். ஆனால் நான் ஒருநாளில் வந்துவிட்டேன். ஆனால் அநுரகுமார 5 நாள்களின் பின்னரே வந்தார்.

இதனால் ஜே.வி.பியினருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கதைக்க அருகதையில்லை. வேண்டுமென்றால் தாக்குதல் தொடர்பில் விவாதத்துக்கு வருமாறு நான் ஜே.வி.பியினரை அழைக்கின்றேன்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தால் ஜனாதிபதித் தேர்தலில் எங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இதனுடன் தொடர்புபட்டவர்கள் யார் என்பதை அநுரகுமாரவிடம் தான் கேட்க வேண்டும்.



கோட்டாவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காகவா இப்ராஹிமின் மகனை அனுப்பினார் என்று கேட்கின்றோம். இதனை யாரின் தேவைக்காக செய்தீர்கள் என்று இப்ராஹிமிடம் அநுர குமார கேட்கலாம் தானே.

எனவே கத்தோலிக்க மக்களின் துன்பத்தை வைத்து அரசியல் செய்ய நான் இடமளிக்கப் போவதில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு நான் ஒருபோதும் அரசியல் லாபம் தேடியமை கிடையாது. - என்றார்.

# 2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 26

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளள எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிராம அலுவலர்கள் வீடுவீடாகச்சென்றுதகவல்களை சேகரிப்பதாகச் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

புதிய பெயர்கள் சேர்ப்பது மற்றும் பெயர் நீக்கம் தொடர்பாக விசாரணை நடத்தி பிரதான ஆவணம் தயாரிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சமார குணசேகர என்பவர் 250 மில்லியன் டொலர் பேர்ள் விவகாரத்தில் லஞ்சம் பெற்றாரென தகவல்!

## மன்றில் போட்டுடைத்தார் நீதியமைச்சர் விஜயதாஸ

எம்.பி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் சமுத்திர வளங்களுக்கு ஏற் பட்ட பாதிப்பு தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட குழு சமர்ப்பித்த அறிக்கையின் ஒருசில உணர்வுபூர்வமான விடயங்களைபகிரங்கப்படுத்த முடியாது.

நட்டஈடு தொடர்பான வழக்கு தோல்வியடைந்தால் அதன் பொறுப்பை சுற்றாடல் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஏற்க வேண்டும்.

வழக்கு தாக்கல் நடவடிக்கைளைத் தடுப்பதற்காக சாமர குணசேகர என்பவருக்கு 250 மில்லியன் டொலர் லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

ஆனால் சாட்சியம் கிடைக்கவில்லை. பொலிஸார் உண்மையை கண்டுப்பிடிக்க வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இருபத்தேழு ,இரண்டின் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

2021 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடல் வளங்களுக்கும்,கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக் கொள்வது தொடர்பில் கடல் வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்தது.

துறைசார் நிபுணர்கள் நட்டஈடு தொடர்பில் இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாதிரிகளுக்கு அமைய கப்பல் விபத்தால் ஏற்பட்ட விளைவுகளுக்கு 6.4 பில்லியன் டொலர் நட்ட ஈடு பெற்றுக்கொள்ள முடியும் என அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் இடைக்கால பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடுபெற்றுக்கொள்வதற்கு சிங்கப்பூர் நாட்டு வணிக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சட்டமாதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நட்டஈடு பெற்றுக் கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள தால் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் ஏனைய உணர்வுபூர்வமான விடயங்களைபகிரங்கப்படுத்த முடியாது.

நீதிமன்றவிசாரணைக்கு உட்படுத்தப்படும் ஒரு விடயத்தை நாடாளுமன்ற விவாதத்துக்கு உட்படுத்த கூடாது என நாடாளுமன்ற நிலையியற்கட்டளையின் 33 மற்றும் 36 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்.பி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சுற்றாடல்துறை தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் மீனவ சமூக பிரதிநிதிகள் ஆகியோரை மேற்பார்வைகுழுவுக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டமைக்கு கடும் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொள்கிறேன்.வழக்குதாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்ட ஒரு விடயத்தை நாடாளுமன்ற தெரிவு குழுவில் விசாரணைக்கு உட்படுத்த முடியாது.

தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கு ஏதாவதொரு வழிமுறையில் தோல்வியடைந்தால் அதன் பொறுப்பை சுற்றாடல் துறை தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு ஏற்க வேண்டும்.இல்லாத அதிகாரத்தை இவர்கள் தவறாக பயன்படுத்தியுள்ளார்கள்.

நட்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் குறித்த கப்பல் தரப்பினரால் இலங்கையர் ஒருவருக்கு 250 மில்லியன் ரூபா இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது, ஆனால் அதற்கு சாட்சியம் கிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் எனக்கு எதிராக அரசியல் மட்டத்தில் சவால் விடுக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் நபர் தொடர்பில் குறிப்பிடுவதற்கு அச்சமடையப்போவதில்லை. சாமர குணசேகர என்பவர் இலஞ்சம் பெற்றுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளேன். உண்மையை அவர்களே கண்டுப்பிடிக்க வேண்டும். - என்றார்.



# UNIVERSITY OF JAFFNA

**A. Research on the Impact of increasing salinity in groundwater on Human Health, in Northern Province, Sri Lanka.**

**Temporary appointment**

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts for research on the impact of increasing salinity in groundwater on Human Health in Northern Province, Sri Lanka in partnership with the University of Manchester, UK.

**1. Research Assistant (01 post)**

**Requirements:**

* MBBS or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
* Minimum 3 years of experience in community-based health-related research.

**Remuneration:**

A monthly salary of LKR 60,000.00 will be paid.

**2. Coordinator(01 post)**

**Requirements:**

* A Bachelor degree or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
* Preference will be given to those who have experience in project coordination especially in community-based health related research.

**Remuneration:** A monthly salary of LKR 45,000.00 will be paid.

**3. Data Collectors(02 posts)**

**Requirements:**

* A Bachelor degree or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
* Minimum one year of experience in community-based health related research.
* Ability to handle e-based data collection.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**4. Data Collecting Assistants(02 posts)**

**Requirements:**

* Should have passed the G.C. E. A/L examination with three passes.
* Preference will be given to those who have experience in health research related and e-based data collection.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

.........................................................................................

**B. Project for community healthcare worker- facilitated fertility care in Northern Province, Sri Lanka.**

**Temporary appointment**

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts for the project on Community healthcare worker-facilitated fertility care in Northern Province, Sri Lanka, funded by International Medical Health Organization (IMHO)

**1. Project Coordinator (01 post)**

**Requirements:**

* A Bachelor degree from UGC approved University or Higher Education Institution.
* Preference will be given to those who have experience in project coordination especially in community-based health related projects.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**2. Community Healthcare Workers ( 05 posts)**

**Requirements:**

* Relevant educational qualification for the post.

or

* Minimum 01-year working experience in community-based health-related projects.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

.........................................................................................

**General note to all the above posts**

* All selected candidates will be appointed on full-time basis for six months.
* Candidates should possess excellent language skills in Tamil.
* Should be a citizen of Sri Lanka.
* Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
* Age should be not less than 18 years and not more than 35 years.
* All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send the scanned copies of all the documents to the email address: **fomvacancy@univ.jfn.ac.lk** on or before Monday , 08th of May 2023.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

The candidates who apply for more than one post should submit a separate application for each of the posts. Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The candidates who apply for **more than one** post should submit **separate applications** along with separate **Bank slips**. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

For further details, please refer to the University of Jaffna website - **www.jfn.ac.lk**

**Registrar**

**24.04.2023**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS







**INCLUSION**

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna

+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை 25.04.2023 கதிர் 39

## முல்லைத்தீவில் இன்று பேருந்து மீது கல் வீச்சு

வடக்கு, கிழக்கு தழுவிய தாயகப்பிரதேசத்தில்அனைத்து வர்த்தக நிர்வாக சேவைகளை முடக்கி முழுமையான அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தி இருந்து இன்று காலை சேவையில் ஈடுபட்ட அரச பேருந்து மீது கல் வீசப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் சாலைக்குச் சொந்தமான அரச பேருந்து ஒன்று அதிகாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம்சென்றுகொண்டிருந்தபோது இன்று அதிகாலை செல்வபுரம் பகுதியில் கல்வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பேருந்து மீது கல்வீசினார்கள் என்றும் பேருந்தின் முன்

3

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டதை எதிர்த்து வடக்கு கிழக்கில் இன்று முழு அடைப்பு

## அம்பாறை தவிர்ந்து ஏனைய இடங்களில் வெற்றி கடைகள் சந்தைகள் மூடல்; இயல்பு வாழ்வு பாதிப்பு







**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்று வலியுறுத்தியும் வடக்கு கிழக்கில் தமிழர் மரபுரிமைகள் அழிக்கப்பட்டு சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பு நிகழ்த்தப்படுவதை எதிர்த்தும் 7 தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்த முழு அடைப்புப் போராட்டம் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த மிகுதி 7 மாவட்டங்களிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. அதேநேரம் வவுனியா மாவட்டத்தில் சிங்கள வர்த்தகர்களும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கித் தமது கடைகளையும் நிறுவனங்களையும் மூடியிருந்தனர்.**

தமிழ் அரசுக்கட்சி, புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அறிவித்திருந்த நிலையில், அதற்குத் தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் முழுமையான அடைப்புப் போராட்டம் இடம்பெற்றது. வர்த்தக நிலையங்கள், கடைகள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

மரக்கறி மற்றும் மீன் சந்தைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவில்லை. தனியார் போக்குவரத்துச் சேவை முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து வியாபார நடவடிக்கைகளும் இந்த மாவட்டங்கள் முழுவதும் முற்றாக முடங்கியிருந்தன. எனினும் அரச திணைக்களங்களும் அரச வங்கிகளும் இயங்கின. தனியார் வங்கிகளும் பாதியளவில் திறந்திருந்தாவது தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தன. அரச போக்குவரத்துச் சேவையான இலங்கை போக்குவரத்துச் சபையின் நீண்ட தூர சேவைகள் நிறுத்தப்படவில்லை.

கிழக்கிலுள்ள மூன்று மாவட்டங்களில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றில் தமிழ், முஸ்லிம் பகுதிகளில் முழு அடைப்புப் போராட்டம் முழுமையாக முன்னெடுக்கப்பட்டது.

அங்கும் கடைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகைதரவில்லை. சந்தைகள் மூடப்பட்டிருந்தன. அரச திணைக்களங்கள், அரச போக்குவரத்துச் சேவை, வங்கிகள் இயங்கின. அம்பாறை மாவட்டத்தில் அடைப்புப் போராட்டம் முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்தது. அங்கு இயல்பு வாழ்க்கையில் எந்தப் பாதிப்பும் ஏற்படவிலல்லை. கடைகள் திறந்திருந்தன. ஏனைய நடவடிக்கைகளும் வழமை போன்று இடம்பெற்றன. (மாவட்டங்களில் போராட்ட நிலை தொடர்பான விவரங்கள் உள் பக்கங்களில் உள்ளன)

முல்லைத்தீவில் சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து ஒன்றின் மீது கல்வீச்சு இடம்பெற்றதைத் தவிர வேறு அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை.

## சாணக்கியன், சுமந்திரன் சபையில் ஆளும் தரப்பினருடன் வாக்குவாதம்

### 'புலிகள்' என்ற சொற்பதத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறும் தர்க்கம்

ஆளும்தரப்பின் உறுப்பினர்களுக்கும், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் சபையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

அமைச்சர் அலி சப்ரிக்கும், சாணக்கியனுக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டதோடு, அமைச்சர் மனு 'புலிகள்' என்று சித்தரித்ததை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு சுமந்திரன் தர்க்கம் செய்தார்.

நாடாளுமன்றத்தில் இன்றையதினம், வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான சந்தர்ப்பத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவான்கரை மற்றும் படுவான்கரை ஆகிய பகுதிகளில் பாலம் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஓர் இனவாதி, கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களின் பாதுகாவலனாகத் தன்னை நினைத்துக் கொண்டு ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகிறார். இதனால் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு தேவைகள் நெருக்கடி நிலையில் காணப்படுகிறது என்றும் குற்றஞ்சாட்டினார்.

தெற்கு மாகாணத்தில் தேவையற்ற வீதி அபிவிருத்திகளும், பாலம் நிர்மாணிப்புக்களும் முன்னெடுக்கப்படுகின்ற. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அத்தியாவசியமான அபிவிருத்திப் பணிகள்கூட முன்னெடுக்கப்படுவதில்லை. இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவை நோக்கி அவர் கேள்வி எழுப்பினார்.

சாணக்கியன் இராசமாணிக்கம் தனது உரையை நிறைவு செய்வதற்கு முன்னர் அவருடைய ஒலிவாங்கி நிறுத்தப்பட்டு அமைச்சர் மானு நாணயக்கார உரையாற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தான் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டமைக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த சாணக்கியன் இராசமாணிக்கம் மக்களின் பிரச்சினையை இந்த சபையில் கேட்பது தவறா என்று எதிர்வாதம் புரிந்தார்.

சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக், உங்களின் கேள்வி ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நீங்கள் சத்தமாக உரையாற்றுவதற்காக நான் அச்சமடையப் போவதில்லை. ஒழுங்குப் பத்திரத்தினை மீறி இந்தச் சபையில் உரையாற்ற முடியாது – என்றார்.

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனு நாணயக்கார இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்குள் குறுக்கிட்டு சாணக்கியன் இராசமாணிக்கம் தொடர்ந்து உரையாட முற்பட்டார். அதற்கு அனுமதி மறுக்கப்படவும், கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும்போது உரிமை மறுக்கப்படுகிறது என்று உரத்த

3

## உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு விசாரணை அறிக்கை கையளிப்பு

### ஆயர் பேரவையிடம் வழங்கினார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவரும் குருநாகல் ஆயருமான கலாநிதி ஹெரால்ட் அந்தோனி பெரேராவிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதிக்கு அமைவாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதிபதி ஜனக்த சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவானது, 214 நாட்கள், பாதுகாப்பு அதிகாரிகள், அரசியல் தரப்பினர், மதத்தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட 457 பேரிடத்தில் சாட்சியங்களைப் பெற்றுத் தனது இறுதி அறிக்கையை வழங்கியிருந்தது..

விசாரணைகளின் பின்னர் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் நாள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்விடத்தில் அந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. அறிக்கை 472 பக்களையும் 215 பக்கபின் இணைப்புக்களையும் கொண்டதாகும்.

இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோதும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான 22 பக்கங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில், கொழும்பு பேராயர் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டவர்கள் இந்த அறிக்கையை முழுமையாக பகிரங்கப்படுத்துமாறு வலியுறுத்தி வந்தனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்து 4 ஆண்டுகள் கடந்தும் நீதி நிலைநாட்டப்படவில்லை என்று தெரிவித்து கத்தோலிக்கச் சமூகத்தினர் கடந்த வாரம் போரட்டங்களை நடத்தியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அறிக்கை முழுமையாக ஆயர்கள் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## அமைதியைப் பேண ஜனாதிபதி முப்படையினருக்கும் அழைப்பு

நாட்டில் அமைதியைப் பேணுவதற்காக நாடு முழுவதும் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினரையும் கடமைக்கு அழைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாக, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று தொடங்கியபோது, பிரதி சபாநாயகர் விடுத்த விசேட அறிவிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஓ.எல். பரீட்சை திகதிகளில் மாற்றமில்லை

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள்; விரைவில் ஆரம்பமாகும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு இன்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இடம்பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்ட படி மே 29 இடம்பெறுமென கல்வி அமைச்சர் அமைச்சரவையில் தெரிவித்தார். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு இதில் பெரும்பொறுப்பு உண்டு.

வெளிநாடுகளில் 20 வயதுக்குள் டிப்ளோமா கற்கையை நிறைவு செய்யக் கூடியவாறான கல்வி முறைமையே காணப்படுகிறது. இலங்கையில் 4 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் சாதாரண, உயர் பரீட்சைகளும் பெறுபேறுகளை வெளியிடலும் தாமதடைந்தால் அது மாணவர்களின் எதிர்காலத்தை பாரதூரமாகப் பாதிக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன்

3

# வவுனியாவில் முழு அடைப்பு சிங்கள மக்களும் பேராதரவு

























பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம், வடக்கு கிழக்கில் சிங்கள மயமாக்கலை எதிர்த்து வடக்கு– கிழக்கில் இன்று முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியா மாவட்டத்திலும் அனைத்துத் துறைகளும் தமது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தன.

இந்த மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மூவின மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன. அந்தப் பகுதிகளில் அனைத்து துறைகளும் முடங்கின. வர்த்தக நிலையங்கள், சந்தைகள், அழகக நிலையங்கள் முழுமையாகப் பூட்டப்பட்டு காணப்பட்டன.

பாடசாலைகளுக்குமாணவர்கள்வருகைதரவில்லை. இதனால் பாடசாலைகள் இயங்கவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிப்படைந்திருந்தது.தனியார் பேரூந்துகளும் சேவையில் ஈடுபடவில்லை. அரசதிணைக்களங்கள், அரச பேரூந்துகள் வழமை போன்று இயங்கின.

# மன்னாரும் முழு அடைப்பால் முடங்கியது









வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் இன்று பொது நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு 7 தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்த நிலையில் மன் னார் மாவட்ட வர்த்தக சங்கங்கள், மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், பொது மக்கள் உட்பட அனைவரும் அதற்கு முழு ஆதரவு வழங்கியுள்ளதுடன் மன்னார் மாவட்டம் முழுவதும் முற்றாக முடங்கியது.

இலங்கை ஆட்சியாளர்கள் பயங்கர வாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கர வாதஎதிர்ப்புச்சட்டத்தைக்கொண்டு வருவதற்குஎதிர்ப்புத்தெரிவித்தும், பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பை எதிர்த்தும் இந்த முழு அடைப்புப் போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட மக்கள் முழுமையான ஆதரவு தெரிவித்திருந்தனர்.

மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன தனியார் போக்குவரத்து சேவையும் முடங்கியிருந்தது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. அதேநேரம் பாடசாலைக்குமாணவர்களின்வருகையும் குறைவாக காணப்பட்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்நிலையில், அரச திணைக்களங்கள் மற்றும் அரச போக்குவரத்து சேவைகளும் வழமைபோல் இடம் பெற்ற போதும்மக்கள்அவற்றிடமிருந்து சேவைகளைப் பெறவில்லை.

## ஓ.எல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் ஆணையாளர் ஏப்ரல் 24 திங்கட்கிழமை விசேட கலந்துரையாடலை முன்னெடுத்தார். அதற்கமைய விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள்வெற்றிகரமாகவிரைவில் முழுமையாகத் தொடங்கும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக மாணவர்களை பயணக்கைதிகளாக்கு-வதை தடுப்பதற்கு இந்த ஆட்சியால் எடுக்கப்படக் கூடிய சகல முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன – என்றார்.

## சாணக்கியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொனியில் தெரிவித்தார். அதைப் பொருட்படுத்தாமல் அவருக்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. அமைச்சர் மனு நாணக்கார உரையாற்றுவதற்குசந்தர்ப்பம்அளிக்கப்பட்டது. அப்போது, அவர் 'புலிகளின்' உண்மை முகம் வெளிப்படுகிறது. பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இவர்கள்தான் தடையாக உள்ளார்கள் என்றவாறு கடுமையாக விமர்சனங்களை சாணக்கியனைப் பார்த்து முன்வைத்தார்.

உடனடியாக ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாவட்டங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைத்து உரையாற்றும் போது 'புலிகள்' என்று சித்தரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

அத்துடன், இந்த அமைச்சர் அரசியலில் எவ்வாறு செயற்படுகிறார் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். சபையில் உரையாற்றும் வழிமுறையை அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனு நாணயக்காரவை நோக்கி அவர் கூறினார்.

உடனே எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் ஆற்றிய உரையில் 'புலிகள்' என்ற சொற்பதம் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அது நாடாளுமன்றப் பதிவேடான ஹென்சாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றில் இன்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

அமைச்சர் பந்துல குணவர்த்தன, சாணக்கியனின் வினாவுக்கு பதிலிப்பதை தவிர்த்த நிலையில், அடுத்ததாக, நல்லிணக்க முயற்சிகள் குறித்து அமைச்சர்களான அலி சாப்ரியும், அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் வீரர்களாக காட்டிக்கொள்கின்றனர். எனினும் இந்த நாடாளுமன்றத்துக்குள்ளேயே நல்லிணக்க விடயங்கள் உரிய வகையில் பின்பற்றப்படவில்லை என்று சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்துப்பேசும்போது அது முக்கியத்து-வம் அற்ற விடயம் என்று பிரதி சபாநாயகர் கூறுகிறார் என்பதை நல்லிணக்கமின்மைக்கான உதாரணமாகச் சாணக்கியன் குறிப்பிட்டார்.

குறுக்கிட்ட அமைச்சர் அலி சாப்ரி, சாணக்கியன், இனவாத அடிப்படையில் செயற்படுகின்றார். நான் தனி இனம் ஒன்றுக்காகச் செயற்படவில்லை. முழு இலங்கையர்களின் நல்லிணக்கம் தொடர்பிலேயே செயற்படுகின்றேன் –என்றார்.

## பொதுஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணாடி சேதமடைந்ததுடன் சாரதியும் பாதிக்கப்பட்டார் என்றும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு சாலையில் இருந்து சென்ற அனைத்து அரச பேருந்துகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

# விபத்தில் சிக்கிய இளைஞனின் உடல் உறுப்புக்கள் தானம்!

## 5 பேருக்கு வாழ்வளிக்கும் நெகிழ்ச்சிச் சம்பவம்

மட்டக்களப்பு சித்தாண்டியில் இடம் பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 5 உடல் உறுப்புக்கள் தானம் செய்யப்பட்ட நெகிழ்ச்சிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வயல்வேலை முடித்து கிரான் பகுதியிலிருந்து சித்தாண்டியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது பிரதான வீதியில் கிரானுக்கும் சித்தாண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்திரசேன ரேனுஜன் (வயது 29) படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தின்போது படுகாயடைந்த அவர், மூளைச் சாவு அடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததை அடுத்து வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது உடலுறுப்புக்களைத் தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்துள்ளனர்.

அதனடிப்படையில் மூளைச் சாவடைந்த ரேனுஜனின் சிறு நீரகங்கள், கல்லீரல், நுரையீரல், இதயம் ஆகிய அவய-வங்கள் தேவையுடையோருக்கு பொருத்தும் வகையில் தானம் செய்யப்பட்டன என ரேனுஜனின் சகோதரி இந்திரசேன கிரிஷாந்தினி தெரிவித்தார்.

தமது சகோதரனை இழந்தது ஆறாத் துயரமாக இருந்த போதிலும் தமது சகோதரனின் உடல் உறுப்புக்கள் 5 பேருக்கு வாழ்வளிக்கும் என்பதில் தமது சகோதரன் சாகா வரம் பெற்றுள்ளார் என நினைத்து தமது குடும்பத்தினர் பெருமையடைவதாக கிரிாந்தினி தெரிவித்தார்.

அத்துடன் இதுபோன்று உடலுறுப்புக்களைத் தானம் செய்ய தாமும் தமது குடும்பத்தவர்களும் சித்தமாக இருப்பதாக அவர் மேலும் தெரரிவித்தார்.

இதனிடையே எப்போதும் பொது நலனில் அக்கறைகொண்டுள்ள கிரி-ஷாந்தினி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இரத்த தானம் செய்து வருவதையும் சுட்டிக்காட்டினார்.

ரேனுஜனின் உடல் அதிகளவானோரின் பங்கேற்புடன் சனிக்கிழமை சித்தாண்டியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பத்தை ஏற்படுத்திய மற்றைய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்றைய போராட்டம் ஒரு தெளிவான செய்தி

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் என்று வலியுறுத்தியும் வடக்கு கிழக்கில் தமிழர் மரபுரிமை வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு பௌத்த சிங்கள பேரினவாத அடக்குமுறை நிகழ்த்தப்படுவதை எதிர்த்தும் வடக்கு கிழக்கில் இன்று முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் பெரு வெற்றி என்று வெளிப்பார்வைக்குத் தோன்றலாம். ஆனால் நுட்பமாகப் பார்க்கும்போது அது எதிர்காலத்திற்கான தெளிவான செய்தியைச் சொல்லி நிற்கும். வரலாற்றையும் எதிர்காலத்தையும் ஒருங்கே காட்டி நிற்கும். தமிழர் அரசியல் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய திசை குறித்த தெளிவான குறிகாட்டியாகவும் அது உள்ளது.

போராட்டம் வடக்கு மாகாணத்தில் முழுமையாக இடம்பெற்றது. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் இந்தப் போராட்டத்தால் முழுமையாக முடங்கின என்று சொல்லுமளவிற்கு அரச திணைக்களங்கள் தவிர்ந்த அனைத்துத் துறைகளும் இணைந்து முழு அடைப்பை முன்னெடுத்தன. அதேநேரம் கிழக்கில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமே போராட்டம் இடம்பெற்றது. மற்றைய பகுதிகளில் இயல்பு நிலை குலையவில்லை. வழமைபோன்றே இருந்தது. அதாவது, மாவட்டத்தின் கணிசமான பகுதிகள், குறிப்பாக முக்கிய நகரங்கள் தவிர்ந்த பகுதிகள் தமிழ் பேசும் மக்களின் வசம் இல்லை என்பதே அதன் செய்தி. அம்பாறை மாவட்டம் முழுமையாக இந்தப் போராட்டத்தில் இருந்து அந்நியப்பட்டு நின்றது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மிக அண்மையில் மிக மோசமான விளைவுகளைச் சந்தித்தவர்கள் முஸ்லிம்கள். பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக்களால் பல அடக்குமுறைகளையும் அழுத்தங்களையும் அம்பாறையிலல் முஸ்லிம்கள் சந்தித்திருக்கிறார்கள். சந்தித்து வருகின்றார்கள். ஆனால், அவர்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அதிலிருந்து விலகியே நிற்கிறார்கள். தமிழ்– முஸ்லிம் மக்களிடையேயான அரசியல் இடைவெளியை இது பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. வடக்கிலும் கிழக்கில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் உள்ள முஸ்லிம்கள் போராட்டத்திற்கு ஆதரவாக இருக்க அம்பாறையில் மட்டும் அதிலிருந்து முஸ்லிம்கள் விலகியிருக்கிறார்கள் என்பது, அம்பாறையின் தனித்துவ அரசியல் கூறை வெளிப்படுத்துகின்றது. இவை கவனிக்கப்பட்டுச் சரிசெய்யப்படவில்லை என்றால் பெரும் ஆபத்தில் சென்று முடியும்.

போராட்டத்தின் இந்தநிலை கிழக்கு தமிழர்களிடம் இருந்து எவ்வளவுதூரம் அந்நியப்பட்டுச் செல்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைமைகளும் வடக்கைச் சேர்ந்தவர்களாகவும், அனைத்து முடிவுகளும் இங்கிருந்துமே எடுக்கப்படும் நிலையில் அந்த அந்நியப்படுதலைத் தவிர்க்க முடியாது. எதிர்காலத்தில் அது இன்னும் தீவிரப்படும்; கூர்மைப்படும். ஏற்கனவே கொழும்பு சிங்கள அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வு வடக்குத் தமிழர்களின் பிரச்சினை என்று கிழக்கிலிருந்து வடக்கைப் பிரித்தே நுட்பமாகப் பேசி வருகின்றார்கள். அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதற்கு விதிவிலக்கல்லர்.

அத்தகையதொரு நிலையில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் கூடிச் சிந்திக்கவேண்டிய தருணம் இது. இப்போதாவது விழித்துக்கொள்ளாவிட்டால் நாளை கிழக்கை முற்றாக இழக்கவேண்டிவரும். அதன் பின்னர் வடக்கையும் மெல்ல மெல்ல இழக்கவேண்டி வரும். கிழக்கு நோக்கிய அரசியல் என்பதே வடக்கையும் பாதுகாக்கக்கூடியது என்பதால் வடக்குமைய அரசியல் சிந்தனையிலிருந்து தமிழ்க் கட்சித் தலைமைகள் மாறவேண்டியது காலத்தின் கட்டாயம்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நிறைவேறினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை இழக்க நேரிடும்!

## எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டு



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ்வரிசலுகையைமீண்டும் இழக்க நேரிடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் பல லட்சக்கணக்கானோர் தொழிலை இழக்க நேரிடும். எனவே அரசாங்கம் இதனை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2018 இல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரசமைப்பு ரீதியாக சூழ்ச்சி இடம்பெற்றதைப் போன்று 2019 இலும் பயங்கரவாத செயற்பாடுகளின் ஊடான சூழ்ச்சி இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சியைக்கைப்பற்றியகோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய எந்தவொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை.

ஆனால் தற்போது அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இந்த சட்ட மூலத்துக்கு அரச பயங்கரவாத சட்ட மூலம் என்றே பெயரிட வேண்டும். இந்தசட்டமூலத்தை எதிர்க்கும் அமைச்சர்கள் பலர் உள்ளனர்.

இந்த சட்ட மூலத்தில் தடுத்து வைப்பதற்கான அதிகாரம் , ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படுகின் றமை உள்ளிட்ட பல்வேறு பாரதூரமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு வருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் அதற்கு மாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை பொறுத்தமானதா?

எதிர்க்கட்சி என்பதற்காக நாம் அனைத்தையும் எதிர்க்கும் நிலைப்பாட்டில் இல்லை. ஆனால் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் உடனடியாக மீளப் பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

இந்த சட்ட மூலத்தில் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகள் மீறப்படுகின்றன. இந்தச்சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படுவதால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை அற்றுப் போகக் கூடிய அபாயம் காணப்படுகிறது. அவ்வாறான OOOOOOOOOநிலைமை ஏற்பட்டால் பல லட்சக் கணக்கானோர் தொழில் வாயப்பை இழக்க நேரிடும். இவற்றின் ஊடாக பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்படக் கூடும். – என்றார்.

# அரசியல் இலாபத்தைப் பெறுவதற்காகவே ராஜபக்ஷர்கள் திருடர்களாக சித்திகரிப்பு!

## நாமல் கவலை



நல்லாட்சி அரசாங்கத்தால் வீழ்ச்சி நிலைக்கு தள்ளப்பட்ட பொருளாதாரத்தையே 2019 ஆம் ஆண்டு பொறுப்பேற்றோம். அரசியல் இலாபத்துக்காகவே ராஜபக்ஷர்கள் திருடர்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடைமையாக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தளை பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சேதன பசளை திட்டம் சிறந்ததாகக் காணப்பட்டாலும் அந்த தீர்மானத்தை ஒரே கட்டத்தில் செயற்படுத்தப்படுத்தியமை பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியது.

நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சேதன பசளை திட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஒரு தரப்பினர் வழங் கிய தவறான ஆலோசனையால் சேதன பசளை திட்டம் தோல்வியடைந்தது.

உர பற்றாக்குறை,எரிபொருள் மற்றும் மின்சார விநியோக கட்டமைப்பு ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்பு மக்கள் போராட்டத்தை தோற்றுவித்தது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தவே காலி முகத்திடல் போராட்டம் தோற்றம் பெற்றது.

போராட்டம் ஊடாக இளைஞர், யுவதிகள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள். காலி முகத்திடல் போராட்டக்களத்தில் முன்னிலையில் இருந்து செயற்பட்ட இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார் என அறிய முடிகிறது. தவறாக வழிநடத்தப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருகிறேன்.

மின் விநியோக நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு ஒரு மெகாவாட் மின் அலகு கூட தேசிய மின்னுற்பத்தி கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. 2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த ராஜபக்ஷர்கள் மீது பொய்யான பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ராஜபக்ஷர்கள் திருடர்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலையாகியுள்ளோம்.

மோசடி செய்யப்பட்ட அரச நிதியை ராஜபக்ஷர்கள் உலக நாடுகளில் பதுக்கி வைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறான நிதி ஏதும் பதுக்கப்பட்டிருக்குமாயின் அவற்றை அரசுடைமையாக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். – என்றார்.

# நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நாட்டுக்கு சாதகமாக மாற்றவேண்டும்!

## சஜித் வலியுறுத்து



சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு என்ற போர்வையில் தேசிய சொத்துக்களை தனியார் துறையினருக்கு தாரை வார்க்கும் சூது விளையாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது. எனவே, நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமானதாக மாற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விசேட அறிவித்தலொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் உள்ள சகல பிரச்சினைகளுக்குமான ஒரே தீர்வு சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் என்று காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

நாணய நிதியத்துக்கு ஆரம்பத்திலேயே செல்ல வேண் டும் என்று நாம் வலியுறுத்தினோம். எனினும், அப்போதைய அரசாங்கம் அதனை காலம் கடத்தி இன்று நாட்டுக்கு சாதகமற்ற இணக்கப்பாட்டை எட்டியுள்ளது. வங்குரோத்தடைந்த நாடொன்றுக்கு நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நிர்வகிக்க முடியாது. எனவே, அவை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், இந்த அரசாங்கம் இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்பதற்கு முன்னெடுக்கும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது.

மாறாக, நஷ்டமடையும் நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாகவும், இலாபம் பெறும் நிறுவனங்களை மேலும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாகவும் மாற்றுவதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்காமல், தேசிய சொத்துக்களை விற்பதை தேசிய குற்றமாகவே நாம் பார்க்கின் றோம்.

எனவே, நாணய நிதியத்தின்ஒப்பந்தத்தை நாட்டுக்கும், மக்களுக்கும் பொருத்தமான வகையில் மாற்றியமைக்க வேண்டும். இதுநாட்டையும், மக்களையும் நேசிக்கும் சகலரதும் பொறுப்பாகும்.

இதனை விடுத்து, நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டின் ஊடாக மக்கள் மீது மேன் மேலும் வரிச் சுமைகளை சுமத்துவது பொறுத்தமற்றது. எனவே, கடன் பெற்றதை பட்டாசு கொளுத்தி கொண்டாட வேண்டிய சந்தர்ப்பம் இது வல்ல.

பண்டோரா ஆவணங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏன் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை?

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தால் நாடு இழந்துள்ள பல மில்லியன் டொலர்களை மீளப் பெற முடியுமல்லவா? மக்கள் மீது சுமத்தப்படும் வரிச் சுமைகளை ஓரளவுக்கேனும் குறைக்க முடியுமல்லவா?

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களுக்கு எதிராக அரசாங்கம் ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்பது அனைவர் மத்தியிலும் காணப் படும் பிரதான பிரச்சினையாகும்.எவ்வாறிருப்பினும்ஐக்கியமக்கள்சக்தியின் ஆட்சியில் இவ்வனைத்துக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளிக்கின்றேன். சர்வதேசநாணயநிதியத்துடனான இணக்கப்பாடுஎன்றபோர்வையில் தேசிய சொத்துக்களை தாரை வார்க்கும் சூதுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது. – என்றார்.

## கொழும்பின் பல பகுதிகளிலும் நேற்று மின்சாரம் தடைப்பட்டது

*கொழும்பின் பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*மருதானை உப மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறுகாரணமாகஇவ்வாறு மின்தடை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.*



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் வாளைச்சேனையில் இன்று மூடப்பட்டன





















(ந.குகதர்சன்)

இலங்கை ஆட்சியாளர்களால் கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிடக் கோரியும், தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த சிங்கள மயமாக்கலை உடனடியாக நிறுத்தக் கோரியும் இன்று முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் காரணமாக வாழைச்சேனையில் வர்த்தக நிலையங்கள் மூடிக்கிடந்தன. பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருந்தது. 7 தமிழ்க் கட்சிகளால் ஓரணியாக விடுக்கப்பட்ட பொது முடக்க அழைப்புக்கு தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினர். உணவகங்கள் உட்பட அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. ஆனால், மீன் சந்தை, மரக்கறி, பழக்கடைகள் திற ந்திருந்தன. . அத்தோடு அரச தி ணைக்களங்கள், வங்கிகள் முழுமையாகத் திறந்திருந்து இயங்கின. தனியார் வங்கிகள் சில வெளியே மூடிக் காணப்பட்டன. தமிழ் பகுதியிலுள்ள பாடசாலைகள் இயங்கினாலும் மாணவர்களின் வருகை குறைவாக காணப்பட்டது. போக்குவரத்து எந்தப் பாதிப்பும் இன்றி வழமை போன்று இயங்கியது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முல்லைத்தீவு மாவட்டத்திலும் முழு அடைப்பு










































(சண்முகம் தவசீலன்)

வடக்கு கிழக்கு தழுவிய முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக முல்லைத்தீவு மாவட்டம் இன்று முழுமையாக முடங்கியது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அதன் கடுமையான விளைவுகளை கருத்தில் கொண்டு எமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துத் துறைகளும் முழுமையாக முடங்கியது.

விசுவமடு,உடையார்கட்டு,புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு,முள்ளியவளை,மாங்குளம்,ஒட்டுசுட்டான்,மல்லாவி வர்த்தகர்கள் தங்கள் வணிக நிலையங்களை மூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களும் பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரும் அனைத்து வணிக நிலையங்களையும் மூடி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அரச திணைக்களங்கள் தவிர்ந்த ஏனை பொதுசேவை அமைப்புக்களான சந்தைகள்,வணிக நிலையங்கள் தனியார் போக்குவரத்து அனைத்தும் அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

# அம்பாறையில் மட்டும் ஆதரவில்லை























(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை திரும்பப் பெறக்கோரியும் வடக்கு கிழக்கில் இடம்பெறும் சிங்கள பௌத்த ஆகிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு கிழக்கி; இன்று நடந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஆதரவு கிட்டவில்லை. அங்கு இயல்பு வாழ்க்கை எந்தவிதப் பாதிப்பும் இன்றித் தொடர்ந்தது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பெரிய நீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, நிந்தவூர், மத்தியமுகாம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று உணவகங்கள் புடவைக்கடைகள் வீதியோர வியாபாரங்கள் வங்கிகள், சந்தைகள், போன்றவை வழமை போன்று இயங்கின.

இம்மாவட்டத்தில் வழமை போன்று அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வந்தததையும் அவதானிக்க முடிந்தது. இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை, ஓந்தாச்சிமடம், காரைதீவு ,சாய்ந்தமருது, மாளிகைக்காடு நிந்தவூர்,அட்டப்பளம், சம்மாந்துறை மாவடிப்பள்ளி ,சவளக்கடை, மத்தியமுகாம் ,உள்ளிட்ட முக்கிய இடங்களில் வழமையான செயற்பாடுகள் எந்தவிதப் பாதிப்பும் இன்றி நடந்தன.

அத்தோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்று பொலிஸாருடன் இணைந்து கடற்படையினரும் தரைப் படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடு பட்டனர்.

கல்முனை பொது சந்தை உட்பட அதனை சூழ உள்ள பாதையோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டியிருந்தது.. மேலும் வியாபார நிலையங்கள் சுப்பர்மார்க்கெட்டுகள், பாடசாலைகள் , பாமசிகள் வங்கிகள் எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கபட்டடு வியாபாரம் இடம்பெற்றது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மண்ணைக்காக்க மரபுரிமை காக்க ஒற்றுமையாக எழுவோம் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லீம்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி முழு அடைப்புக்கு ஆதரவளிப்போம் என்று தமிழ்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருந்தபோதும் அம்பாறையில் அதற்கு எந்த ஆதரவும் வெளிப்படுத்தப்படவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# மட்டக்களப்பில் முழு அடைப்பு இயல்பு வாழ்க்கை பாதிப்பு











நாடாளுமன்றத்தில்கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு எதிராகவும் பௌத்த மயமாக்கலை எதிர்த்தும் இன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முழு அடைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த அடைப்பு போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கில் உள்ள 7 தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன. மட்டக்களப்பில் இந்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

அதையேற்று இன்று கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.


# கிளிநொச்சியும் முழுதாக முடங்கியது














பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று வடக்கு கிழக்கில் இடம்பெற்ற முழு அடைப்புப் போராட்டத்தினால் கிளிநொச்சி மாவட்டம் முழுமையாக முடங்கியது.

கடைகள், சந்தைகள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் எவையும் திறக்கவில்லை. தனியார் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. அரச பேருந்துகள் சில இயக் கப்பட்டாலும் அவற்றில் பயணிக்க எவரும் இருக்கவில்லை.

# யாழ்ப்பாணத்திலும் முழு முடக்கம்

























பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு கிழகக்கில் இடம்பெறும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பை எதிர்த்தும் யாழ்ப்பாணத்தில் இன்று முழுமையான அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் ,சந்தைகள் யாவும் மூடப்பட்டுள்ள நிலையில் பொது மக்களின் நடமாட்டம் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஏழு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்திருந்த இந்தப் போராட்டத்திற்கு ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு பொது அமைப்புக்களும் ஆதரவு வழங்கியிருந்தன. தனியார் பேருந்து சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன. இலங்கை போக்குவரத்துச் சபையின் தூர இடங்களுக்கான சேவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெற்றன. முச்சக்கர வண்டி சேவையும் யாழ். நகரில் இடம்பெற்றது. ஒரு சில உணவகங்கள் மற்றும் மருந்தகங்கள் திறந்திருந்தன. ஏனைய அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன. .பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக செயற்பாடுகளும் முற்றாகச் செயலிழந்திருந்தன.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்துக்கு எதிராக இலங்கை நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யலாம்!

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக கப்பல் நிறுவனத்துக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து சம்பவத்தை முழுமையாக மூடி மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

2021 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் தாக்கம் இன்றும் தொடர்கிறது.

கப்பல் நிறுவனத்திடமிருந்து 6.4 பில்லியன் டொலர் நட்டஈடு பெற்றுக்கொள்ள முடியும் என துறைசார் நிபுணர்கள் அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

கப்பல் நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் கடந்த காலங்களில் தாமதப்படுத்தப்பட்டன எனவும், தற்போது துரிதப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்படுகிறது.

கப்பல் நிறுவனத்திடமிருந்து இலங்கைக்கு கிடைக்கப் பெறவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தடுப்பதற்கு இலங்கையர் ஒருவருக்கு 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கடல்வாழ் உயிரினங்களை அழித்த ஒரு செயற்பாட்டை மறைப்பதற்கு இலங்கையர் ஒருவர் இலஞ்சம் பெற்றுள்ளார் என்பது வெறுக்கத்தக்கதொரு செயற்பாடாகும்.

உலகில் வேறெந்த நாடுகளிலும் இவ்வாறான நிலை கிடையாது. 250 மில்லியன் டொலர் பெற்ற நபர் யார் என்பதை நீதியமைச்சர் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு சிங்கப்பூர் நாட்டு வணிக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அரசாங்கம் தீர் மானித்துள்ளது.

கப்பல் நிறுவனத்துக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம். அதற்கான சட்ட வழிமுறைகள் காணப்படுகின்றன.

சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இந்த சம்பவம் தொடர்பில் மக்களின் கவனத்தை திசைத்திருப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற பாரிய சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. இலங்கைக்கு கிடைக்க வேண்டிய 6.4 பில்லியன் டொலர் தொகை கிடைக்க விடாமல் செய்ய பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. – என்றார்.

# பதவி எப்போது பறிபோகுமென்ற அச்சத்தில் தினேஷ்: எதிர்க்கட்சித் தலைவராகுகின்ற கற்பனையில் நாமல்!

## மரிக்கார் எம்.பி. சாட்டை



மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சியில் அவரது விசுவாசிகள் ஈடுபட்டுள்ளமையால் பதவி எப்போது பறிபோகும் என்ற அச்சத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன காணப்படுகிறார்.

மறுபுறம் நாமல் ராஜபக்ஷ கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தில் தானே எதிர்க்கட்சி தலைவர் என்ற கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த வாரம் கிரக மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மாற்றங்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதகமாகவும் அமைந்துள்ளனவாம்.

எனவே ஜோதிடம் மீது கொண்டுள்ள 50 சதவீத நம்பிக்கையிலும் , அரசியல் மீது கொண்டுள்ள 50 சதவீத நம்பிக்கையிலும் மஹிந்த ராஜபக்ஷ சிறு விளையாட்டொன்றை ஆரம்பித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் எப்போதும் இணைந்திருக்கும் சிலர் அவருக்கு பிரதமர் பதவியை வழங்கி கௌரவமான ஓய்வை வழங்குமாறு கூறிக் கொண்டிருக்கின்றனர்.

இதை எண்ணி பதவி எப்போது பறிபோகும் என்ற அச்சத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன காணப்படுகின்றார். இந்த முரண் பாடான நிலைமை நீளும் போது பொது ஜன பெரமுன பிளவடைந்து, அரசாங்கம் பெரும்பான்மையை இழந்து பொதுத் தேர்தலுக்கு செல்லவேண்டி யேற்படும்.

இனவாதத்தைத்தூண்டி அரசியல் செய்யும் கட்சியான பொதுஜன பெரமுன தற்போது மிகப்பொருத்தமான தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதன் புதிய நியமனங்கள் பொருத்தமானவையா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் , தம்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் தாம் பயந்து ஓடவில்லை என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

அவரது தந்தை மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை முகாமில் தலைமறைவாகியிருந்ததை மறந்து நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறுமக்கள் சந்திப்புக்களுக்கு செல்லும் போது அங்குள்ள சிறு கூட்டத்தைக் கண்டதும் தான் அடுத்த எதிர்க்கட்சி தலைவர் என்ற கற்பனை நாமல் ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ளது. – என்றார்.

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் பதிவாகியது: இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை இல்லையாம்!

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவின் மேற்கு பகுதியில் 7.3 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.


இந்த நிலநடுக்கத்தால் இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்பட வில்லை என வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் சுட்டிக்காட்டியுள்ளது.



# திருகோணமலையிலும் தமிழ், முஸ்லிம் பகுதிகளில் முழுமையான அடைப்புப் போராட்டம் இன்று நடந்தது









(ஹஸ்பர்)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், சிங்களமயமாக்கலை எதிர்த்து வடக்கு கிழக்கில் இன்று முழு அடைப்புக்கு ஆதரவாக, திருகோணமலை மாவட்டத் தில் தமிழ், முஸ்லிம் மக்கள் அடைப்புக்கு ஆதரவு தெரிவித்து அவர்களுடைய பகுதிகளில் சகல துறைகளும் இன்று முடங்கியுள்ளன.

திருகோணமலையில் தமிழ், முஸ் லிம் மக்களின் வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டு இருந்தன, பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தரவில்லை இதனால் பாடசாலைகள் இயங்கவில்லை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து இருந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2023 இல் வெளியிடப்பெற்றது.